Registered as a Newspaper

# தினச்செய்தி

வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

உள்ளே...

- ஐ.நா. சபையும் சர்வதேச சமூகமும் பாதுகாப்பு வழங்க வேண்டும் சிவாஜிலிங்கம் - பக். 03
- சீனாவில் நாய் இறைச்சி விழா - பக். 16
- மட்டக்களப்பில் எல்லாள மன்னன் - பக். 20

விலை : ரூபா 20.00

செய்தி - 40 ஜூலை 02-08, 2016 பக்கம் - 20

# சிறைச்சாலை சீர்திருத்தம்

## கைதிகளுக்கு தொலைபேசி வசதி ஏற்படுத்த கோரிக்கை

(கொழும்பு)

சிறைச்சாலை சீர்திருத்தம் சம்பந்தமாக சிறையில் இருப்பவர்களுடன் வெளியாளர்கள் தொடர்பு கொள்ளக் கூடிய தொலைபேசி அமைப்பது சம்பந்தமாக சிறைச்சாலைகள் திணைக்களம், சிறைச்சாலை சீர்திருத்த பொறுப்பு அமைச்சு ஆலோசித்து வருவதாக தெரியவருகிறது.

தற்சமயம் நாட்டில் மொத்தமாக 31 சிறைச்சாலைகளும், தற்காலிகமாக விளக்கக் கைதிகளை வைப்பதற்கு 19 விளக்க கைதிகளுக்கான சிறைச்சாலைகளும் உள்ளன.

02 இல்



## ஸ்ரேர்லிங் பவுண்ஸின் வீழ்ச்சி

(கொழும்பு)

இலங்கையில் ஒரு ஸ்ரேர்லிங் பவுண்ஸின் பெறுமதி ரூபா 220 இருந்தது. ஆனால் இன்று பவுண்ஸ்ன் பெறுமதி ரூபா.191 க்கும் ரூபா. 194 க்கும் இடையில் ஊசல் ஆடிக்கொண்டிருக்கிறது. ஒரு காலத்தில் ஸ்ரேர்லிங் பவுண்ஸ் இலங்கை ரூபாவிற்கு எதிராக மிகவும் பலம் வாய்ந்த நாணயமாக இருந்தது. ஆனால் இன்றோ...?

ஐரோப்பிய ஒன்றியத்தில் இருந்து ஐக்கிய இராச்சியம் (U.K) விலகும் நடைமுறை Brexit British exit என்ற சொல்லின் சுருக்கம் தான் Brexit இதற்கான வாக்கெடுப்பு சென்ற 23 ஆம் திகதி யூன் மாதம் நடைபெற்றது. அந்த வாக்கெடுப்பு, அன்று கூட ஸ்டேர்லிங் பவுண்ஸ் ரூ.219 ஆக இருந்தது. ஆனால் மறுநாள் இலங்கை மத்திய வங்கியில் வெளிநாட்டு செலாவாணி மதிப்பீட்டின் படி ஸ்ரேர்லிங் பவுண்ஸின் பெறுமதி தடால் என்று வீழ்ந்தது 1 பவுண்ஸின் ரூபா 191 ஐ பெற்றுக் கொண்டது.

02 இல்

## திக்கம் வடிசாலையை மீளமைக்க ரூபா. 112. 5 மில்லியன் ஒதுக்கீடு




(கொழும்பு)

இலங்கையின் வடக்கு மற்றும் கிழக்கு பிரதேசங்களில் வாழ்வாதார அபிவிருத்தியின் முக்கிய துறையாக பனை வளம் காணப்படுவதுடன், மூன்று தசாப்த யுத்தம் காரணமாக இத்துறை மிகவும் நலிவுற்ற நிலையில் காணப்பட்டது. குறிப்பாக பனை கைத்தொழிலில் மிகவும் முக்கிய செயற்பாடாக கருதப்படுவது கள்ளு இறக்கும் தொழிலாகும். இத் தொழிலில் ஈடுபடுகின்ற 7500 ற்கும் மேற்பட்டவர்கள் வட மாகாணத்தில் பனை அபிவிருத்தி கூட்டுறவு சங்கங்களில் உள்ளனர் எனவும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சின் செயலாளர் வே. சிவஞானசோதி தெரிவித்தார்.

உற்பத்தி செய்யப்படும் மேலதிகமான கள்ளு வீணாக்கப்படுவதனால் சீவல் தொழிலாளர்களின் வாழ்வாதாரம் மிகவும் மோசமாக பாதிக்கப்படுகின்றது. சீவல் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்தும் நோக்குடன் விரயமாக்கப்படும் மேலதிக கள்ளினை வடிசாலையில் வினாகிரி, சத்திர சிகிச்சைக்கான ஸ்பிரிட், சாராயம் போன்ற உற்பத்திகளாக மாற்றுவதற்கு திக்கம் வடிசாலை 1984 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்டது.

02 இல்

## பிரிட்டிஷ் பிரதமர் பதவிக்கு ஐவர் போட்டி

(லண்டன்)

பிரிட்டிஷ் பிரதம மந்திரி பதவிக்கு பழமைவாதி கட்சியான (conser vative) கட்சியை சேர்ந்த ஐந்து பேர் போட்டியிட முன்வந்துள்ளார்கள். ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டிஷ் விலகுவது சம்மந்தமாக சர்வ ஜன வாக்கெடுப்பை அடுத்து பிரிட்டிஷ் பிரதமர் டேவிட் கமரோன் அக்ரோபர் மாதம் பதவி விலகுவதாக அறிவித்துள்ளார். அதை அடுத்து முன்னாள் லண்டன் மாநகர சபை முன்னாள் நகர பிதா (மேயர்) தான் அடுத்த பிரதமராக வருவார் என செய்திகள் வெளி வந்தன.

02 இல்




## கொண்டோடிச் சுப்பர்





## வலிகாமம் மக்களுக்கு வீடமைக்கும் இராணுவம்

(யாழ்ப்பாணம்)

காங்கேசன்துறை சீமெந்து தொழிற்சாலைக்குச் சொந்தமான 18 ஏக்கர் நிலத்தில் 100 வீடுகள் கட்டி பயனாளிகளுக்கு கொடுக்க இராணுவம் முன்வந்துள்ளதாக வடமாகாண இராணுவக்கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,





ஒவ்வொரு வீடும் 20 பேர்ச் 2 பரப்பு காணியில் கட்டப்பட உள்ளன. 10x10, 10x12 நீள அகலத்தில் இரண்டு படுக்கை அறைகள், வரவேற்பறை, குசினி, வீட்டுக்கு வெளியே விறாந்தை என்பன அவ்வீட்டில் அடங்கி இருக்கும்.

02 இல்

தினச்செய்தி
வாரமலர்

Registered at the Department of Posts of Sri Lanka Under No QD/29/News/2016

தொலைபேசி : 021 2242636
தொலைநகல் : 021 2242139
இணையதளம் : www.thinacheithi.com/lk

# பொலிஸாருக்கான மரபு நெறியாள்கைகளும் நடத்தை குறியீடுகளும்

அண்மையில் விசேட பொலிஸ் படையின் பொறுப்பதிகாரி உதவி பொலிஸ்மா அதிபர் ரஞ்சித் பெரேரா பத்திரிகையாளர் மாநாட்டில் பேசும் பொழுது, 'விசேட பொலிஸ் படையினரால் இந்த பாதாளலோக கோஷ்டியினை அடக்கக் கூடியதாக இருக்குமாயின், போதைப்பொருள் கடத்துபவர்களை எங் களால் கைது செய்ய முடியுமாயின் எங்களுக்கு எதிராக எங்களிடம் குறைகூறும் பத்திரிகையாளர்களை எங்களால் அடக்க வெகுநேரம் பிடிக்காது" எனக் கூறியதை அடுத்து பெரும் பரபரப்பு எற்பட்டது.

இதை அடுத்து பொலிஸாருக்கான நடத்தைக் குறியீடு கள் இதுவரை அமுல்படுத்தப்படவில்லை என்பது தெரிய வருகிறது. அவர்களுக்கான மரபு நெறிகளும் அமுலுக்குக் கொண்டு வர வேண்டும் என அண்மையில் நடந்து கொண்ட பத்திரிகையாளர் மாநாட்டில் தேசிய பொலிஸ் ஆணையத்தின் செயலாளர் ஆரியதாசா கூரே குறிப்பிட்டதை கவனத்தில் எடுக்க வேண்டும்.

பொலிஸாரின் நடத்தைகள் சீரான முறையில் பொதுமக்கள் அனுசரித்து போகும் விதத்தில் அமைக்கப்பட வேண்டும். பொலிஸார் பொதுமக்களுடன் அன்பாகவும், பண்பாகவும் நடக்க முன்வர வேண்டும். அவர்கள் பொதுமக்களின் சேவ கர்கள் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும். அதை விட எந்த ஒரு பொலிஸாரும் வானத்தில் இருந்து குதித்தவர்கள் அல்ல. இதை பொலிஸாரின் நடத்தை குறியீட்டில் சேர்த்து கொள்ள வேண்டும் என ஆரியதாசா கூரே கூறினார்.

இந்த மரபு குறியீடுகளில் ஒவ்வொரு பொலிஸாருக்கும் அரசாங்க திறைசேரியினால் வழங்கப்படும் பணத்தைத் தான் சம்பளமாக வழங்கப்படுகின்றது என்றும், சமூக மேம் பாட்டிற்காக வேலை செய்கிறார்கள் என்றும் எந்த ஒரு தனி நபரையும் பாதிக்காமல் அவர்களது சேவை இருக்க வேண் டும் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒவ்வொரு பொலிஸாரும் இந்த மரபு நெறிகளைப் பின் பற்ற வேண்டும். ஒருவரைக் கைது செய்கின்ற பொழுது கைது செய்பவரின் அடிப்படை உரிமை மீறப்படாமல் கைது செய்யப்பட வேண்டும் எனக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறு சந்தேகத்தின் அடிப்படையில் கைது செய்யப் படும் நபர் மனித உரிமைகள் பாதிக்கப்பட்டால் அவ்வாறு பாதிக்கப்பட்ட நபர் சம்பந்தப்பட்ட பொஸிக்கு எதிராக முறைப்பாடுகள் செய்வதற்கும், அது சம்பந்தமாக பொலிஸ் உத்தியோகத்தவர் தவறான முறையில் நடந்து கொண்டால் அவருக்கு எதிராக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவினால் நடவடிக்கை எடுக்க முடியும்.

அது மாத்திரமல்லாது பத்திரிகை மாநாட்டிலோ, வேறு ஒரு பொது நிகழ்விலோ அந்தப் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் மேல் அதிகாரி, கீழ்த்தரமான வார்த்தைகளைப் பிரயோகிக்க கூடாது. மேலும் அரசாங்கத்தின் நற்பெயரைப் பாதுகாக்க பொலிஸார் முன் வர வேண்டும். பொலிஸார் எவரையும் கைது செய்யும் பொழுது கைது செய்பவர்கள் மீது வன் செயல்கள் பிரயோகிக்கக் கூடாது. உதாரணமாக அடி, உதை, தீய வார்த்தைகள் பேசுதல் போன்றவை தவிர்கப்பட வேண்டும் என்று பொலிஸ் தேசிய ஆணையக்குழு கருதுகிறது.

சட்ட விரோத செயல்களில் ஈடுபடுவோரைக் கைது செய்வதற்கும், பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைதுசெய்து அந்த சட்டத்தின் கீழ் தடுத்து வைக்கவும் அதிகாரம் இருக்கிறது. ஆனால் இந்தத் தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டவர்களின் அடிப்படை மனித உரிமைகள் மீறப்படாமல் இருக்க வேண்டும் என்று இலங்கை மனித உரிமை ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது. பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்படுபவர்களை எந்த வித விசாரணையும் இல்லாமல் 18 மாதம் சிறையில் அடைக்க அதிகாரம் உண்டு. கோபதாபங்களை மனதில் வைத்துக் கொண்டு, எந்த ஒரு நபரையும் பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்து அவர்களை சிறையில் அடைத்து வைக்க முன்வரக் கூடாது என்று அண்மையில் ஜனாதிபதி விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

பொலிஸார் ஒழுக்கத்துடனும் கட்டுப்பாட்டுடனும் நடக்க முன்வர வேண்டும். அதிகாரம் உள்ளது என்று பொது மக்களை வாட்டி எடுக்கக் கூடாது. பொலிஸார் மக்களின் நண்பனாக இருக்க வேண்டும், எதிரியாக இருக்கக் கூடாது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## சிறைச்சாலை ...

இன்றைய நிலையில் இந்த சிறைச்சாலைகளில் மொத்தமாக 18 000 சிறைக் கைதிகள் விளக்க மறியல் கைதிகளாக உள்ளார்கள் என்று சிறைச்சாலை ஆணையாளர் நாயகம் ஏச்.எம். என்.சி. டனசிங்க தினச்செய்திக்கு கூறினார்.

மேலும் இவர் இந்த விடயம் தொடர்பாக குறிப்பிடும் பொழுது, "கொழும்பு உயர்பாதுகாப்பு வெலிக்கடை சிறைச்சாலையில் கைதிகள் தங்களுடைய உறவினர் களை தொடர்பு கொள்வதற்கு பரீட்சார்த்தமாக மூன்று தொலைபேசிகள் வைக்கப்பட்டுள்ளன. இந்த தொலைபேசி ஊடாக ஏதாவது தேவையாயின் கைதிகள் தங்களுக்கு வேண்டியவர்களுடன் தொடர்பு கொள்ள முடியும," என அவர் கூறினார்.

மேலும் இந்த விடயம் தொடர்பாக சிறைச்சாலை சீர்திருத்தத்திற்கு பொறுப்பான அமைச்சின் செயலாளர் வி. சிவஞானசோதியிடம் தொடர்பு கொண்ட போது சிறைச்சாலை சீர்திருத்தம் சம்பந்தமாக பல திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது என்றும் முக்கியமாக தற்சமயம் சிறைச்சாலையில் உள்ள கூடுதல் கைதிகளின் நெரிசல்களை குறைக்கும் விதத்தில் புதிய கட்டிடம் ஒன்று கட்ட உள்ளதாக கூறினார். அது மட்டுமல்லாது நகரப் புறங்களில் இருக்கின்ற சிறைச் சாலைகளை கிராமப் புறங்களுக்கு கொண்டு வர உள்ளதாக கூறினார்.

சிறைச்சாலையில் இருக்கிற ஒரு கைதியை அவரது உறவினர்கள், நண்பர்கள் அல்லது வேறு யாருமோ தொடர்பு கொள்ள வேண்டுமானால் தற்சமயம் அவர்கள் நேரடியாக சிறைச்சாலை சென்று தான் பார்க்க முடியும். ஏன் அவர்களுக்கு தொலைபேசி வசதி செய்து கொடுக்கப்படவில்லை என்று தினச்செய்தி கேட்ட போது இது தொடர்பாக சிறைச்சாலை சீர்திருத்தம் திட்டமிடப்பட்டுள்ளதாக திரு. சிவஞானசோதி கூறினார் .

ஒவ்வொரு சிறைச்சாலைக்கும் 5 தொலைபேசிகள் இணைக்கப்பட்டு அந்த தொலைபேசியில் சிறைச்சாலைக் கைதிகள் குறிப்பிட்ட நேரத்தில் மட்டும் தொடர்பு ஏற்படுத்தி கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது என்றும் இவ்வாறு தொலைபேசி மூலம் தொடர்பு கொள்பவரின் பேச்சுகள் பதிவு செய்யப்பட வேண்டும் என ஆலோசித்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

வெளிநாடுகள் பலவற்றில் இவ்வாறு சிறைக்கைதிகளுடன் வெளியாட்கள் தொடர்பு கொள்ள கூடிய வசதிகள் இருப்பது போல இங்கும் அவ்வாறு செய்யவுள்ளதாகவும் கூறினார். அது மாத்திரமல்லாது வெலிக்கடை சிறைச்சாலையில் ஆரம்பிக்கப்பட்ட பரீட்சார்த்த திட்டம் போல சிறைக்கைதிகளும் வெளியாட்களுடன் தொடர்பு கொள்ள வசதிகள் செய்ய திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

மேலும் அது மாத்திரமல்லாது கைதிகளுக்கு நல்ல உணவு, வைத்திய வசதி, மனவுளைச்சல் ஏற்படாதவாறு பல விடயங்கள் குறிப்பாக கைத்தொழில் பயிற்சி போன்றனவும் செய்து கொடுக்க திட்டமிடப்பட்டுள்ளதாகவும் கூறினார்.

ஒரு காலத்தில் ஆடு, மாடுகளை அடைத்து வைப்பது போன்று சிறையில் கைதிகளை அடைத்து வைத்தார்கள். இன்று சிறை என்பது கைதிகளுக்கு தண்டனை வழங்கும் இடமாக இல்லாமல் சீர்திருத்த இடமாக மாறவேண்டியுள்ளது என அமைச்சர் டி.எம். சுவாமிநாதன் தலைமையில் உள்ள அமைச்சு திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகிறது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## திக்கம் ...

திக்கம் வடிசாலையிலுள்ள இயந் திரங்களும், பொறித்தொகுதிகளும் தேய்மானமடைந்த காரணத் தால் அதனுடைய உற்பத்தித் திறனும், வெளியீடும் தரம் குறைவாக காணப்படுவதுடன் உற் பத்திச் செலவும் அதிகமாகக் காணப்பட்டது.

இந்நிலை காரணமாக திக்கம் வடிசாலையினை நவீனமயமாக்கி மீளச் செயற்படுத்துவதற்காக சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர் வாழ்வளிப்பு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சர் டி.எம். சுவாமிநாதனால் முன்வைக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்தில் நவீன இயந் திரத் தொகுதியுடன் கூடிய பொறித் தொகுதிகளை நிர்மாணிப்பதற்கும் வடிசாலையை மீளச் செயற்படுத்தவும் ரூபா. 112.5 மில்லியன் கிரயத்தில் மீள்செயற்படுத்துகை கருத்திட்டம் முன்னெடுக்கப்படுவதன் அவசியம் வெளிப்படுத்தப்பட்டது. அமைச்சரவை இதற்கான நிதி அங்கீகாரத்தினை சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு, புனர்வாழ்வு, மீள்குடியேற்றம் மற்றும் இந்துமத அலுவல்கள் அமைச்சுக்கு வழங்கி பனை அபி விருத்திச் சபை மூலம் இதனை முன்னெடுத்து பனைத் துறையில் தங்கி வாழும் சீவல் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த அனுமதி வழங்கியதென அமைச்சின் செயலாளர் வே.சிவஞானசோதி தெரிவித்தார். யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களுக்கென ஒதுக்கப்பட்ட புனர்வாழ்வு, மீள்குடியேற்ற ஒதுக்கீட்டின் கீழ் திக்கம் வடிசாலையை நவீனமயமாக்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியதுடன் திறைசேரி நிதியில் செயற்பாட்டு, பராமரிப்பு செலவுகளுக்கு தங்கியிராமல் சுயாதீனமாக வருமானம் ஈட்டல் மூலம் முன்னெடுக்கப்பட வேண்டுமெனவும் விதந்துரைக்கப்பட்டது. திக்கம் வடிசாலை மீள் செயற்படுத்துகைக்காக அமைச்சரவையின் அங்கீகாரம் வறுமைக் கோட்டின் கீழ் வாழ்கின்ற சீவல் தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் அமைச்சின் செயலாளர் வே. சிவஞான சோதி கருத்துத் தெரிவித்தார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## பிரிட்டிஷ் ...

ஆனால் அவர் இப்பொழுது தான் பிரதமர் பதவிக்கு போட்டி யிட விரும்பவில்லை என அறிவித்து விட்டார்.

அதையடுத்து ஜவர் தற்சமயம் கோதாவில் உள்ளனர். இவர்களில் உள்நாட்டு செயலர் தெராஷா மே முன்னனி வகிக்கிறார். ஜரோப் பிய யூனியனை விட்டு விலக வேண்டும் என்ற பிரசாரத்தில் முக்கியஸ்தர் ஒருவராக இருந்த நீதி செயலர் மைக்கல் கோவ் மற்றும் ஸ்ரீபன் கிறாப், டாக்ரர் லியாம் பொக்ஸ், அன்றியா லீட் சொப் ஆகியோர் கோதாவில் குதித்துள்ளனர். லீட் சொமன் என்பவர் கமரோன் அமைப்பில் இங்கிலாந்து ஜரோப்பிய யூனியனில் இருந்து விலக வேண்டும் என்ற கோஸ்டியை சேர்ந்தவர்.

வேலை ஓய்வூதியம் பொறுப்பாளராக இருந்த செயலர் கிறாம், முன்னால் பாதுகாப்பு செயலர் டாக்ரர் லியாம் பொக்ஸ் ஆகியோரும் இந்த பதவி போட்டியில் முன்னணியில் உள்ளார்.

அடுத்த பிரதமர் சம்பந்தமாக நாடு பூராகவும் உள்ள ஆயிரக்கணக்கான பழமை விரும்பி கட்சி உறுப்பினர்கள் வாக்களிக்க உள்ளார்கள். அதிகபடியான வாக்ககளை பெறுபவர் வெற்றி அடைந்தவர் என்று அறிவிக்கப்படும் வரை கமரோன் பதவியில் இருப்பார்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## ஸ்ரேர்லிங்...

இலங்கையில் வாழும் தமிழர்களில் மேலை நாடுகளில் வசிக்கிறார்கள். அனேகமானவர்கள் தங்கள் உறவினர்களுக்கும், சொந் தங் களுக்கும் மாதாந்தம் பிரிட்டிஷ் பவுண்ஸ் பணம் அனுப்புகிறார்கள். முன்பு அவர்கள் அனுப்பும் பணம் ரூபா 220 பெறுமதியாக இருந்தது. ஆனால் இன்று அதே பணம் ரூபா.191-194 பெறு மதி யாக இருக்கிறது. இங்கிலாந்து ஜரோப்பிய நாட்டைவிட்டு விலகியதால் எமது நாட்டில் வாழும் தமிழருக்கு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## வலிகாமம்...

வீட்டுக்கு முன்புறம் குளியலறை, மலசல கூடம் என்பன அமைக் கப்படும். 45 நாட்களுக்குள் வீடுகளைக் கட்டி முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

ஒரு வீடு கட்டும் பணியில் பய னாளியும் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினரும் 10 இராணுவத்தினரும் பணிபுரிவார்கள். முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினருக்கு ஒருநாள் கூலியாக ரூபா 1000 வழங்கப்படும்.

இந்த வீடுகளைக் கட்டுவதற்கான கட்டுமானப் பொருட்களை சிறைச்சாலைகள் சீர்திருத்தம் மற்றும் புனர்வாழ்வு புனரமைப்பு இந்து விவகார அமைச்சு யாழ். மாவட்ட செயலாளரூடாக வழங்கும். காணிகள் அளவீடு செய்து துப்புரவாக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

# ஐக்கிய நாடுகள் சபையும் சர்வதேச சமூகமும்
# தமிழர்களுக்கு பாதுகாப்பு வழங்க வேண்டும்

## — சிவாஜிலிங்கம் —



(ஜெனீவா)

கடந்த 70 வருடங்களாக தமிழ் மக்கள் மிகவும் கஸ்டங்களுக்கும் இன்னல்களுக்கும் ஆளாகி விட்டார்கள். ஆனால் இன்றும் அவர்கள் படும் துன் பங்கள், துயரங்கள் அதிகரித்துக் கொண்டே போகிறதே தவிரக் குறையவில்லை. எனவே தமிழர்களுக்கு உரிய நியாயத்தையும், அரசியல் உரிமைகளையும், பாதுகாப்பையும் பெறுவதற்கு அவர்கள் ஐக்கிய நாடுகள் சபையையும், சர்வ தேச சமூகத்தையும் தான் நம்பி இருக்கிறார்கள்.

இந்த நிமிடம் வரை தமிழருக்கான அநீதிகள் தொடர்ந்து கொண்டே தான் இருக்கின்றன. இவ்வாறு எம்.கே. சிவாஜிலிங்கம் கூறினார்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், வடமாகாண சபை உறுப்பினருமான எம்.கே. சிவாஜிலிங்கம் ஜெனிவாவில் நடைபெறும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் மாநாட்டின் 32 ஆவது அமர்வில் கலந்து கொண்டு அறிக்கை வெளியிட்டார்.

அவர் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிட்டதாவது :

"தொடர்ச்சியாக பதவிக்கு வந்த இலங்கை அரசாங்கங்களினால் தமிழ் மக்கள் நீண்ட காலமாக ஏமாற்றப்பட்டதும், மோசடிகளுக்கு உற்படுத்தப்பட்டதும், அது பெரிய நீண்ட வரலாற்று உண்மைகள் ஆகும். ஐக்கிய நாடுகள் சபை பல அறிக்கைகளுக்கும், தீர்மானங்களுக்கும், விசாரணைகளுக்கும் பிற்பாடு, சென்ற வருடம் வெளிநாட்டு நீதிபதிகளையும், விசாரணையாளர்களையும், உட்படுத்தப்பட்ட ஓர் விசாரணை பெறிமுறையினை உள்ளடக்கிய தீர்மானத்தை, இலங்கை அரசு இணைத்து வெளியிட முன்வந்த போது அந்த தீர்மானத்திற்கு இலங்கை அரசு முன்மொழிந்தது.

ஆனால், இவ்வாறு வாக்குறுதியளித்த பிற்பாடு அரசாங்கத்தின் உயர் பதவியில் உள்ளவர்கள் - ஜனாதிபதி, பிரதம மந் திரி ஆகியோர், அவர்கள் வழங்கிய வாக்குறுதிகளை மீறும் வகையில், "எக் காரணம் கொண்டும் வெளிநாட்டு நீதி பதிகள், விசாரணையாளர்கள், வழக்க றிஞர்கள், புலனாய்வாளர்களை அனுமதிக்க மாட்டோம் என்றும், இலங்கை இராணுவத்தினை பாதுகாப்போம் என்றும் திடசங்கல்பம் பூண்டுள்ளார்கள்."

சிவாஜிலிங்கம் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிடுகையில் "தமிழர்கள் இம் மாதிரியான இலங்கை அரசின் மோசடி தன்மையை கண்டு ஆச்சரியப்படவில்லை. எப்போதுமே தமிழர்கள் இலங்கை அரசினால் நீதி கிடைக்கும் என்று நம்பிக்கை வைத்தது கிடையாது. எனவே இலங்கை அரசின் தற்போதைய போக்கு சென்ற வருடம் ஐ.நா. சபையில் நிறைவேற்றப்பட் தீர்மானத்திற்கு எதிராக இருப்பதினால் இது இலங்கை அரசின் மீதான விசுவாசமின்மையையே பிரதிபலிக்கின்றது."

இவ்வாறு ஏமாற்றுத்தனமாக இலங்கை அரசு நடப்பதனால், அவர்கள் எவ்வாறு தமிழர்களை நடத்துகிறார்கள் என்று ஐக்கிய நாடுகள் சபைக்குத் தெரிய வருகின்றது அல்லவா?

கடந்த பல தசாப்பதங்களாக இலங்கையின் தகடுதத்தத்தை நன்கு தெரிந்தவர்களுக்கு, அந்த அரசாங்கம் தமிழர்களுக்கு நீதி வழங்காது என்பது அவர்களுக்கு தெரிந்த விடயமாகவே இருக்கும்.

எல்லாக் குற்றங்கள் இன படுகொலைள் சம்பந்தமாக விசாரிக்கப்பட வேண்டும். மேலும் வெளிநாட்டு நீதிபதிகளும், சட்டத்தரணிகளும் விசாரணை பெறிமுறையில் சம்பந்தப்படாமல் தமிழர்களுக்கு எந்தக் காலத்திலும் நீதி கிட்டாது.

இலங்கை அரசாங்கம் பல விடயங்களை செய்வதாக வாக்களித்த. ஆனால் இது வரை அவர்கள் அந்த வாக்குறுதிகளை நிறைவேற்றும் விதத்தில் எதுவுமே செய்யவில்லை.

பெரும்பான்மையான நிலங்கள் தமிழருக்குச் சொந்தமானவை. ஆனால், அந்த நிலங்களை இராணுவத்தினர் சட்ட விரோதமாக கைப்பற்றியுள்ளார்கள். இன்றும் அந்த இடங்கள் இராணுவ வசம் தான் உள்ளன.

பாரம்பரியமாக தமிழருக்கு சொந்தமான இடங்களில் புத்தர் கோயில் கட்டி வருகிறார்கள். இவ்வாறு கட்டி எமது பிரதேசத்தில் உள்ள சனப் பரம்பலை மாற்றி அமைக்க அரசு தீவிர முயற்சியில் ஈடுபட்டுள்ளது.

இராணுவம் தமிழர் வாழ்கையில் எல்லா விதத்திலும் தலையிட்டு கொண்டே இருக்கிறது. எனவே சர்வதேச சமூகம், மற்றும் ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கை அரசாங்கத்தின் பொய்யான வாக்குறுதிகளைக் கண்டு மயங்கிவிடக் கூடாது. ஆனால் செயற்பாடுகளை வைத்தே இல ங்கை அரசாங்கத்தை மதிப்பிட முன் வர வேண்டும். எனவே சர்வதேச சமூக மும் ஐக்கிய நாடுகள் சபையும் இலங்கை அரசாங்கத்திற்கு மேலும் மேலும் நெருக்குதல் கொடுக்க முன்வர வேண்டும்.

தமிழர்களை அடக்குமுறை மூலமாகவும், ஆக்கிரமிப்பு மூலமாகவும் நெருக்குவாரப்படுத்தி வரும் சிங்கள அரசாங்கம் இன ஒருமை சம்பந்தமாக வெட்கமில்லாமல் பேசுகின்றது. தமிழர்களுக்கு நீதி கிடைக்காமல், அவர்களுடைய அரசியல் உரிமை வழங்கப்படாமல், இன ஒருமைப்பாடு என்றுமே நடைபெறாது. இவை எல்லாம் நடக்காவிட்டால் நாட்டில் சமாதானம்மற்றும்ஸ்திரதன்மைஆகியன தொடந்து கைகூடாமலேஇருக்கும்.

எனவே பாதிக்கப்பட்ட தமிழர்கள் சம்பந்தமாக பின்வரும் யோசனைகளை கவனத்தில் கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

1. நிறை வேற்றப்பட்ட தீர் மானம் 30/1 ல் குறிப்பிடப்பட்டுள்ள சகல அம்சங்களும் எந்த விதமான தாமதமும் இன்றி, நிறைவேற்ற வேண்டும் என்று இலங்கை அரசாங்கத்தை ஐக் கிய நாடுகள் சபை தீர்க்கமாக வேண்டு கோள் விடுக்க வேண்டும்.

(தொடர்ச்சி 18 இல்)

# வங்காள தேசத்து உணவக பணயக் கைதி நாடகம் முடிவுக்கு வந்தது



(டாக்கா)

வங்களாதேசத்து துருப்புகள் 14 பணய கைதிகளை காப்பாற்றினார்கள். பணயக் கைதிகளைப் பிடித்து வைத்திருந்த ஆறு ஐ.எஸ். பயங்கர வாதிகளையும் சுட்டு விழுத்தினார்கள்.

இதன் மூலம் வெள்ளிக்கிழமை தொடக்கம் இன்று மதியம் வரை டாக்காவில் உள்ள ஒரு உணவகத்தில் நிகழ்ந்து கொண்டிருந்த பணய கைதிகள் நாடகம் முடிவுக்கு வந்து விட்டதாக வங்காள தேசத்து இராணுவ தளபதி பிறிகேடியர் ஜெனறல் முயுபூர் ரகுமான் கூறினார்.

ஐ.எஸ். பயங்கரவாத இயக்கத்தை சேர்ந்த துப்பாக்கிதாரர்கள் வங்களா தேச தலைநகரமான டாக்ராவில் அமைந்துள்ள வெளி நாட்டு ராஜ தந்திரிகள் காரியாலயம் அமைந்துள்ள பகுதியில் இருந்த உணவகத்தில் திடீர் என்று நுழைந்து 20 பண யக் கைதிகளை, அவர்களில் பலர் வெளிநாட்டை சேர்ந்தவர்கள் என்பது குறிப்பிடதக்கது.

அதை அடுத்து ஆரம்பத்தில் பொலிஸார் அந்த உணவு சாலைக்கு பணயக் கைதிகளை மீட்க சென்றபோது பயங்கரவாதிகள் சரமாரியாக பொலிஸாரை நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்தார்கள். அப்பொழுது 2 பொலிஸார் கொல்லப்பட்டனர்.

# டாக்டர் இந்திரஜித் குமாரசுவாமி மத்திய வங்கியின் புதிய ஆளுநர்



(கொழும்பு)

ஸ்ரீ லங்காவின் பொருளாதார விற்பன்னர் டாக்டர் இந்திரஜித் குமாரசுவாமி மத்திய வங்கியின் புதிய ஆளுநராக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

'சகலரையும் கலந்து ஆலோசித்த பின்னர் டாக்ரர் இந்திரஜித் குமார சுவாமி மத்திய வங்கியை தலைமை வகிக்க நான் நியமித்துள்ளேன்," என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தனது டுவிட்டர் பக்கத்தில் குறிப்பிட்டார்.

டாக்டர் இந்திரஜித் குமாரசுவாமி முன்பு பொது நல நாடுகள் செயலகத்தில் பொருளாதார விவகாரங்களின் இயக்குனர் ஆவார்.

ஆரம்ப கல்வியை கொழும்பு றோயல் கல்லூரியிலும், பின்னர் இங்கிலாந்தில் உள்ள ஹறோக் கல்லூரியிலும், இளநிலை பட்டப்படிப்பை கேம்பிரிஜ் பல்கலைக்கழகத்திலும், கலைமாமணி பட்டத்தை சசெக்ஸ் பல்கலைக்கழகத்திலும் பெற்றார்.

அதற்கு பின்னர், 1973 ஆம் ஆண்டு இலங்கை மத்திய வங்கியில் சேர்ந்து பொருளாதார ஆராய்ச்சி, புள்ளி விபரம், வங்கி மேற்பார்வை பகுதியில் 1989 ஆம் ஆண்டு வரை பணி புரிந்தார். 1981 ஆம் ஆண்டு தொடக்கம் 1989ம் ஆண்டு வரை நிதி திட்டமிடல் அமைச்சிற்கு மாற்றப்பட்டு அங்கே பணி புரிந்தார்.1990 ஆம் ஆண்டில் இருந்து 2008 ஆம் ஆண்டு வரை பொது நல நாடுகளின் பொருளாதார பணிப்பாளராகவும், பொருளாதார விவகாரத்தின் உதவிப்பணிப்பாளராக செயலாளர் நாயகத்தின் காரியாலயத்திலும் பணிபுரிந்தார்.

தற்சமயம் அமெரிக்காவில் சிறையில் இருக்கும் ராஜ் ராஜரட்ணத்தினால் உருவாக்கப்பட்ட கலிலியோன் கம்பனியில் விசேட ஆலோசகராக உள்ளார்.

# அரசகேசரியின் பதில்கள்



**கேள்வி: வடக்கின் பொருளாதார மத்திய நிலையத்தை மதவாச்சிக்குக் கொண்டு செல்ல திரை மறைவில் சதி நடப்பதாக வடமாகாண முதலமைச்சர் சொல்கிறார். இதன் பின்னணி என்ன?**

தி. வரதராஜன், வவுனியா.

பதில்: எமக்குத் தெரிந்த வகையில் பொருத்தமான் இடம் தாண்டிக்குளம்தான் என அமைச்சர் ரிஷாட் கூறுவதாகத் தெரிகிறது. ஆனால், இந்த விவகாரத்தில் வதந்திகள் பரவுவது வரவேற்கத்தக்க விடயம் அல்ல.

**கேள்வி: ஐரோப்பிய யூனியனிலிருந்து பிரிட்டன் வெளியேற எடுத்த முடிவு சரியானதா?**

சி. விமலநாதன், சாவகச்சேரி.

பதில்: அந்த நாட்டின் பெரும்பான்மையான மக்கள் எடுத்த முடிவு. 52 சதவீதத்தினர் ஆதரவாகவும் 48 சதவீதத்தினர் எதிராகவும் வாக்களித்துள்ளனர். இந்த முடிவு ஐக்கிய ராச்சியத்தை இருகூறாகப் பிரித்துள்ளது.

**கேள்வி: வடபகுதி அசிரியர்கள் மீது சுமத்தப்படும் பாலியல் புகார் மாணவர்கள் மீது எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தும்?**

மு. நிசாந்தன், முல்லைத்தீவு.

பதில்: பயங்கரமான தாக்கத்தை ஏற்படுத்தும்.

**கேள்வி: மது அருந்துவதில் வடபகுதி முன்னணியில் உள்ளதாம். இது எதனால் வந்தது?**

சி. ரமணி, மன்னார்.

பதில்: இதுவும் ஆயுதக் கலாசாரத்தின் பின் விளைவு என்று தான் கூற வேண்டும்.

**கேள்வி: படையினர் விடுவிக்கும் பகுதியில் உள்ள கட்டடங்கள் திட்டமிட்டு அழிக்கப்படுவதாக குற்றம் சாட்டப்படுகிறது. இது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?**

அ. ராகினி, காரைநகர்.

பதில்: இதற்கு பதில் சொல்வது கடினம். நீண்ட நெடிய யுத்தத்தின் காரணமாக அதி உயர் பாதுகாப்பு வலயத்தில் கவனிப்பாரின்றி இருந்தன. இயற்கையாகவே அவை அழிந்து போயிருக்கலாம். இருக்கலாம். இல்லை என்று தான் கூறலாம்.

**கேள்வி: இலங்கைப் பிரச்சினையில் இந்தியா நேரடியாகத் தலையிடப் போவதில்லை என்று தகவல் வந்துள்ளது. இலங்கைத் தமிழர்களுக்கு இது பின்னடைவை ஏற்படுத்துமா?**

டி. ரமணன், பரந்தன்.

பதில்: இலங்கைத் தமிழர்கள் என்றால் இதனை வரவேற்கத் தக்கது. இலங்கைத் தமிழர் அன்றி வேறு இனம் என்றால் பின்னடைவுதான்.

**கேள்வி: ஐரோப்பிய யூனியனில் இருந்து பிரிட்டன் வெளியேறுவது இலங்கைக்கு பாதிப்பை ஏற்படுத்துமா?**

ர. சரவணன், திருகோணமலை.

பதில்: நிச்சயமாக. இங்கிலாந்தில் இருந்துதான் நம்மவர்களுக்கு அதிக பணம் வருகிறது. ஒரு ஸ்ரேலிங் பவுண் ரூபா 225 ஆக இருந்தது. இப்போது ரூபா 119 என இலங்கை மத்திய வங்கி அறிவித்துள்ளது. இது பெரிய தாக்கத்தை ஏற்படுத்தும், குறிப்பாக தமிழர்களுக்கு பெரிய பாதிப்பு.

**கேள்வி: சரவணபவனின் மகளுடைய பிறந்த நாள் விழாவில் ஜனாதிபதி மைத்திரி கலந்து கொண்டது நல்லாட்சிக் கொள்கையில் ஒன்றா?**

அ. அருமைநாயகம், யாழ்ப்பாணம்.

பதில்: இதற்கு சரவணபவன் தான் பதில் கூற வேண்டும்.


**அரசியல், சினிமா, விளையாட்டு சம்பந்தமான உங்கள் கேள்விகளை தபால் அட்டையில் எழுதி அனுப்பவும்.**

*கேள்விகளை அனுப்பவேண்டிய முகவரி*

**அரசகேசரி**
**தினச்செய்தி**
*தில்லைகட்டிவீதி,*
*சுன்னாகம்.*

குப்பையில் எது கிடந்தாலும் அதை வீட்டுக்கு எடுத்துச் சென்றுவிடுவார், ஆர்தர் போர்டாலோ (Arthur bordalo). அந்தக் குப்பைகளை அழகாகத் தரம் பிரித்து வைப்பார். பிறகு, அதையெல்லாம் பூனையாகவும், புலியாகவும், முயலாகவும் மாற்றி விடுவார். ஆனால், இவர் மந்திரவாதி இல்லை, போர்ச்சுக்கல் நாட்டைச் சேர்ந்த வித்தியாசமான ஓவியர்.


ஆர்தர் ஓவியம் வரைவது பெயின்ட்டில் அல்ல... நாம் தூக்கிஎறியும் குப்பைகளில். இரும்பு, தகரம், சேதமடைந்த கார் உதிரிப் பாகங்கள், டயர்கள் என வீணாக குப்பையில் எறியப்படும் பொருட்கள் எது கிடைத்தாலும், அதை 3D ஓவியங்களாக மாற்றிவிடுவார். விலங்குகள், பறவைகளின் உருவங்களை உருவாக்குவார். வண்ணம் தீட்டி, கதவுகளில் பொருத்தி விடுவார். போர்ச்சுக்கல்லின் தலைநகரமான லிஸ்பனின் முக்கியத் தெருக்களில் ஆர்தர் போர்டாலோவின் ஓவியங்களைக் காணலாம்.





## மயக்கும் மெகா ஓவியம் !








## பறவைகளைத் தேடி

ஃபேஸ்புக்கில் தினம்தினம் நமக்கு அறிமுகமில்லாத பல பறவைகளின் புகைப் படங்களைப் பதிவேற்றி அவற்றைப் பற்றிய தகவல்களையும் தருகிறார் அரவிந்த் அமிர்தராஜ்.



“மன்னார்குடிப் பக்கம் காவிரியாற்றின் கிளைநதி பாயும் வடபாதி தான் என் சொந்த ஊர். இப்போ மனைவியோடு சென்னையில் செட்டில் ஆகியாச்சு. பறவை கள் மீதான காதல் இயற்கையாகவே எனக்குள்ள இருந்துச்சு. பறவைகளுக்கு சாப்பாடு, தண்ணி வைக்கிறதுனு இயற்கை மேல நேசம் இருந்தாலும் முன்பெல்லாம் புகைப்படம் எடுக்கிற மாதிரி ஐடியா இல்லை.

சில ப்ரொஃபஷனல் போட்டோகிராஃபர்கள், பறவைகள், விலங்குகள்னு இயற்கையை அழகழகாப் படம் பிடிச்சு சமூக வலைதளங்கள்லபதிவேற்றுவாங்க. அவை எல்லாமே பச்சைக்கிளி, சிட்டுக்குருவி மாதிரி நமக்குத் தெரிஞ்சதாகவே இருக்கும். தமிழ் நாட்டுல மட்டும் ஐநூறுக்கும் மேற்பட்ட பறவை வகைகள் இருக்கிறதாம். எப்படி விதம் விதமான பறவைகளைப் பார்க்கிறதுனு ஆரம்பத்துல தெரியலை. பறவைகளைக் கண்காணிக்கிற கணேஷ்வர் எனும் நண்பர் ‘பு ஆஃப் இண்டியன் பேர்ட்ஸ்’ அப்படிங்கிற ஒரு புத்தகத்தைப் பரிந்துரைச்சார். அதிலே இருந்த தகவல்களை வெச்சுப் பல பறவைகளின் வாழிடங்கள், வசிக்கும் சூழல் போன்றவற்றைக் கண்டறிஞ்சு தேட ஆரம்பிச்சேன். இதுவரை 282 பறவை இனங்களைப் பற்றிய தகவல்களோட புகைப்படம் எடுத்து ebird.org என்னும் சர்வதேசத் தளத்துல பதிவு பண்ணிருக்கேன்.

சில வித்தியாசமான பறவைகளைப் படம் எடுத்தாலும் அந்தந்த வட்டாரப் பெயர் இருக்கிறதனால பெயர் கண்டுபிடிக்க முடியாது. உதாரணமாகத் தவிட்டுக்குருவிக்கே மஞ்சள் சிலம்பன், சருகுண்ணிப்பறவைனு வேற வேற பெயர்கள் இருக்கும். வெறும் புகைப்படம் எடுக்கிறது மட்டும் சிலருக்குப் பொழுதுபோக்காக இருக்கும். என்னை மாதிரி தகவல்களைத் திரட்டிட்டே புகைப்படம் எடுக்கிறவங்க தமிழ்நாட்டுல ரொம்பக் குறைவுதான். அந்த வகையில் பறவைகளைப் பற்றிப் பலர் அறிவதற்கு நாம காரணமா இருக்கோம்னு நினைக்கும்போது பெருமையா இருக்கு. ,தற்காகத் தினமும் விடிவதற்கு முன்பாகவே பறவைகளைத் தேடிப் புறப்படுவேன்.

சாதாரணமா ஒரு பறவையைப் பார்த்ததும் புகைப்படத்தை எடுத்துட்டுப் போறதுக்கு நிறையப் பேர் இருக்காங்க. அதோட உணவு, நிறமாற்றம், எல்லாம் தெரிஞ்சுக்கபலமணிநேரம்காத்திருக்கேன். ஒரு மீன்கொத்தி, மீனைக் கவ்விப் பிடிக்கிறதையோ, ஒரு அக்காக்குயில் கம்பளிப்பூச்சியைப் பிடிக்கிறதையோ படம் பிடிக்கணும்னா, அதே லாவகத்தை நாமளும் கையாளணும். எதிர்காலத்தில், நம்மில் பலருக்குப் பரிச்சயமில்லாத பறவைகளைப் பற்றிய தகவல்களைத் தொகுத்துப் புத்தகமாக வெளியிட வேண்டும் என்பதுதான் இப்போதைக்கு ஆசை. அதுவரை அவைகளைத் தேடிக்கொண்டே இருப்பேன்” எனப் பறவைகள் மீதான காதலில் கசிந்தபடி முடிக்கிறார்.

# சமூக விழிப்புணர்வுக் களம்

## குடும்ப வாழ்க்கையில் தலைமைத்துவம் வகிப்பது

நேர்காணல் : V. தயாளன்





## பெண்களா? ஆண்களா?

குடும்ப வாழ்க்கையில் தலைமைத்துவம் வகிப்பது பெண்கள்! ஆண்கள்! என்ற கேள்வி சம்மந்தப்பட்ட அலசலை சென்ற வாரம் ஆரம்பித்து வைத்தோம்.

இந்த அலசல் சம்மந்தமாக பல பெண்களை நேர் கண்டோம். அவர்களில் 99 வீதமானோர் குடும்ப வாழ்க்கையில் தலைமைத்துவம் வகிப்பது பெண்கள் தான் என அடித்துக் கூறினார்கள்.


இந்த நேர்காணலை கண்ட தினச் செய்தியை சேர்ந்த தயாளன், தாய் குலத்தை மட்டும் பேட்டி காணவில்லை. பல ஆண்களையும் பேட்டி கண்டார்.

இம்முறை அந்த ஆண்களின் பேட்டியையும் இங்கே தருகிறோம். இந்த பேட்டியில் கருத்து தெரிவித்த ஆண்களில் பலர் குடும்ப வாழ்கையில் தலைமைத்துவம் வகிப்பது பெண்கள் தான் என்று தாராள மனத்துடன் கருத்துக்களையும் கூறினர்.

ஒரு குடும்ப வாழ்க்கை என்பது ஆணும் பெண்னும் சம்மந்தப்பட்ட விடயமாகும். ஒரு ஆணும் - பெண்னும் இரட்டை மாட்டு வண்டிகளைப் போன்று குடும்ப பாரத்தை இழுத்து செல்கிறார்கள்.

தமிழர்களின் குடும்பத்தில் ஆணும் பெண்னும் இணைந்து குடும் பத்தை நடத்துகிறார்கள். ஆண் குடும்ப தலை வராகவும், பெண்கள் தலை வியாகவும் இருக்கிறார்கள். இருவருமே கருத்து ஒரு மித்து காதலராக ஒருவர் மீது ஒருவர் போட்டி போட்டுக் கொண்டு அன்பை செலுத்தி அவர்களின் குடும்ப வாழ்க் கையை மகிழ்ச்சிகரமாக நடத்துகிறார்கள். இது தான் தமிழ் குடும்பம். எந்த விடயத்திலும் திருப்தி அடையாதவர்கள் வாழ்க்கையில் திருப்திகரமாகவும் மகிழ்ச சிகரமாகவும் நடந்து வருகிறார்கள் என் றால் மிகையாகாது.

# ஓர் அலசல்



***ராஜ் - King restaurant***
***சுன்னாகம் புகையிரத நிலையம் முன்பாக***

வீட்டில் பெண்கள் தயாரிக்கும் உணவுகளை சுவைப்பவர்களை விட எமது உணவகங்களில் ஆண் களால் தயாரிக்கப்படும் உணவுகளையே அதிகம் பேர் சுவைக்கிறார்கள். இதுவே எங்கள் கைப்பக்குவத்தைக் காட்டுகிறது தானே. முன்பு சமையலறையில் பெண்கள் ராஜ அதிகாரம் காட்டியவஉகள். இதேபோல அங்கேயும் இப்போ நாங்கள் தான் கொடிகட்டிப் பறக்கின்றோம். இப்போ சமையலில் ஆண் பெண் என்ற வரையறை இல்லவே இல்லை. இங்கு ஆண் பெண்ணுக்கான 100மீ ஓட்டப் போட்டி நடப்பதில்லை. ஒரு சுவாரஸ்யமான போட்டி தான் எப்போதும் நடக்கின்றது.



***மரியசேகரம் ஜோன்குமார்***
***சுன்னாகம்***

புதிய தலைமைத்துவத்தை ஏற்றிருப்பவர் கள் தலைமையில் பல நிறைவான புதுமை மலரும். ஒரு சில வலிகள் இருந்தாலும் மனைவி என்பவள் தலைவியாக மனதை மாற்றி அமைக்கிறாள் என்கிறார். மனைவியின் மாண்பு பற்றி சிறப்பாக கூறினார்.



***எம். தரணிதரன்***
***சபாபதிப்பிள்ளை வீதி,சுன்னாகம்.***

சில விடயங்களை வெளிப்படையாக கூறமுடியாது. (ஒருவனுக்கு ஒன்று பலம் என்றால் இன்னொன்று பலவீனம்) ஆக மொத்தத்தில் விகித அடிப்படையில் கூறி னாலும் இன்று பெண்கள் எதிலும் சளைப்பதில்லை. முகாமைத்துவம், தலை மைத்துவம் எல்லா பக்குவமும் அவர் களுக்குத் தான் அதிகம். அவர்களுக்கே எனது ஆதரவு.



***பி. தனுசன்***
***சங்கானை. உணவு தயாரிப்பாளர்***


சகல குறைகளையும் தன்னகத்தே கொண்டு குறைகளைத் தேடிப்பிடிப்பவர்கள் ஆண்கள் தான்.

எமது குடிப் பழக்கத்தை மட்டும் வைத்துக் கொண்டு பெண்கள் குறை கூறினாலும் நான் பெண்களின் நிறைகளை அதிகமாக காண்கிறேன். ஒத்துக் கொள்கிறேன்.



***எஸ். குகநேசன் (ராசி)***
***அச்சுவேலி, ஒலி, ஒளி பதிவாளர்***


அந்த காலப்பகுதியில் அன்பும், பண்பும் இணைந்த ஒரு தலைமை இருந்தது. வாழ்க்கை எனும் நீண்ட தூரப் பயணத்தில் தொடர்ந்தும் இருவர் ஒருவராக இருந்தால் சிறந்த தலைமை தான் என்று தன் கருத்தை கூறினார் மேலும் குடும்பம் என்றால் ஆணும் பெண்ணும் கொண்ட அமைப்பாகும்.



# சொன்னார்கள் சொன்னார்கள்



இலங்கைத் தீவில் ஈழத்தமிழர் என்ற தேசிய இனத்திற்கு எதிராக நடாத்தப்பட்டு வருகின்ற இன அழிப்புக்குப் பின்னால் ஒரு சித்தாந்தம் இருக்கிறது. இந்த இன அழிப்புச் சித்தாந்தம் இலங்கை அரச இயந்திரத்தினுள் பல அடுக்குகளில் நிறுவனமயப்படுத்தப்பட்டிருக்கிறது என்று வட மாகாண சபை உறுப்பினர் அனந்தி சசிதரன் ஜெனிவாவில் தெரிவித்தார்.



இலங்கையில் நடைபெற்ற இறுதி யுத்தத்தில் கொத்தணி குண்டுகள் பயன்படுத்தப்பட்டமைக்கான புதிய ஆதாரங்கள் வெளியாகியுள்ளன. இது தொடர்பில் பக்கச்சார்பற்ற விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் ஆணையாளர் செய்யத் அல் ஹூசைன் வலியுறுத்தியுள்ளார்.

தன் மீது தற்கொலைக் குண்டுத்தாக்குதல் நடத்துவதற்கு உதவினர் என்ற குற்றஞ்சாட்டில் கைதுசெய்யப்பட்டு, சிறையில் அடைக்கப்பட்டுள்ள தமிழ்க் கைதிகளுக்கு மன்னிப்பு வழங்கமுடியாதென்று, பாதுகாப்பு அமைச்சின் முன்னாள் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.






தனக்கு வழங்கப்பட்டுள்ள இராணுவ பாதுகாப்பை நீக்க வேண்டாம் என முன்னாள் பாதுகாப்பு செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ எழுத்து மூலம் எந்த கோரிக்கையும் முன்வைக்கவில்லை என பாதுகாப்பு செயலாளர் கருணாசேன ஹெட்டியாரச்சி தெரிவித்தார். அவர் ஊடகங்களுக்கே இந்த விடயத்தை தெரிவித்துள்ளதாக குறிப்பிட்ட செயலாளர் தன் னிடம் எந்த கோரிக்கையும் முன்வைக்க வில்லை எனவும் கூறினார்.

சிறுபான்மை தமிழ் மக்களுடன் நல்லிணக்கத்தை வென்றெடுப்பதை இலக்காகக் கொண்டு விடுதலைப் புலிகளுடனான பிரிவினைவாத யுத்தத்தை தான் முடிவுக்கு கொண்டு வந்திருந்ததாகவும் ஆயினும் தனது ஆட்சி விட்டுச் சென்ற தடத்தை அழித் தொழிப்பதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ கூறுகிறார்.





“வடமாகாணத்துக்கான பொருளாதார மையம் எங்கே அமைக்கப்பட வேண்டும் என்பதில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்புக்குள் கருத்து முரண் பாடுகள் எதுவும் இல்லை. இவ்விடயத்தில் இறுதி முடிவை எடுக்க வேண்டியவர் வடமாகாண முதலமைச்சர்தான்” என எதிர்க்கட்சித் தலைவரும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவருமான இரா. சம்பந்தன் உறுதியாகத் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கையின் யுத்தத்தின் போது இனப் படுகொலை இடம்பெற்றதாக கூறப்படும் குற்றச்சாட்டை நான் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள மாட்டேன். யுத்தத்தின் போது பாரதூரமான மனித உரிமை மீறல்கள், போர் குற்றங்கள் இடம்பெற்றதாக குற்றச்சாட்டுகள் உள்ளன. அவை குறித்து நாம் நம்பகரமான விசாரணை நடத்துவோம் என்று வெளி விவகார அமைச்சர்மங்கள சமரவீர தெரிவித்தார்.



## அங்கும் இங்கும்

## எப்பவும் தண்ணியிலதான்


நம் ஊரில் பெரிய மால்களுக்கு நடுவே நீச்சல்குளம் இருக்கும். ஆனால், கட்டாரின் தலைநகரான டோஹாவிற்கு மேற்கில் ஒரு கால்வாய்க்கு நடுவில்தான் மாலே இருக்கிறது. ‘வில்லாகியோ மால்’ எனும் பெயர் கொண்ட இந்த அதிசய மால் ஒரு பெரிய கால்வாய்க்கு நடுவே இருக்கிறது. இந்தக் கால்வாயில் ‘கொண்டோலா ரைட்’ எனும் பெயரில் படகுப்போக்குவரத்தும் நடைபெறுகிறது. இன்னொரு சிறப்பம்சமும் வில்லாகியோ மாலில் உண்டு. மால் அமைந் துள்ள கட்டடத்தின் மேலே உண் மையான வானம் போலவே செயற்கையாக உருவாக்கப்பட்ட முகடு அமைக்கப் பட்டிருக்கிறது ஒரு லட்சம் சதுர மீட்டர் பரப்பளவில் அமைந்துள்ள இந்த மாலில்



எளிதில் தீப்பற்றக்கூடிய பெயின்ட்டுகளை அதிக அளவில் உபயோகித்ததும் விபத்திற் குக் காரணமாகக் கருதப்படுகிறது. எனினும், சர்ச்சைகளிலிருந்து மீண்டு எழுந்து வெற்றிகரமாகச் செயல்பட்டு வருகிறது ‘வில்லாகியோ’.

மற்றவற்றில் இருப்பதைப் போலவே தியேட்டர்கள், சூப்பர் மார்க்கெட்டுகள், ஐஸ் ஹொக்கி தளங்கள் என எல்லாமே உள் ளன. இதில் 2012 ஆம் ஆண்டு ஒரு தீ விபத்து நிகழ்ந்து 13 சிறுவர்கள் உட் பட 19 நபர்கள் உயிரிழந்தனர் அபாய அலாரம் முன்பே ஒலி எழுப்பியிருந் தாலும் அதைப் பணியாளர்கள் அலட்சியப்படுத்தி விட்டதுதான் உயிரிழப்பிற்குக் காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது. மேலும்,

## எனக்கே எனக்கு...



வீடு மற்றும் அலுவலகத்தில் நமது கப்பை வேறு யாரும் பயன்படுத்தினால், பயன்படுத்தியவரை முறைத்துப் பார்த்துவிட்டு ஒன்றிற்கு இரண்டு முறை கப்பைக் கழுவிவிட்டு பயன்படுத்தத் தொடங்குவோம். ஆனால் இந்தப் பிரச்சினைக்கும் தீர்வைக் கண்டு பிடித்திருக் கிறார்கள். கப்பின் அடிப்பாகத்தில் ஒரு துளை இருக்கும். இதனால் இதை வேறு யாராலும் பயன்படுத்த முடியாது. இந்தத் துளையை அடைக்கக்கூடிய சிறிய லொக் உரிமையாளரிடம் இருக்கும். தேவைப்படும் நேரத்தில் இந்த லொக் மூலமாக கப்பின் துளையை அடைத்து அவர் பயன்படுத்திக் கொள்ளலாம். அதன்பின் கீ செயினில் மாட்டிக்கொண்டு எளிதில் இந்த லொக்கை கொண்டுசென்றுவிடலாம்.

# தமிழீழ விடுதலைப் புலிகளும் அநுராதபுர படுகொலையும்

## பிரபாகரனின் வாழ்க்கை வரலாறும் சமகால நிகழ்வுகளும்

பிரபாகரன் ஈழத் தேசிய இடதுசாரி முன்னணியில் அங்கம் வகிப்பதில் அவ்வளவு விருப்பமுடையவராக இருக்கவில்லை.

இந்த நிலைப்பாட்டை அவரது உதவியாளர்கள் தெளிவாகப் புரிந்திருந்தார்கள். அதாவது போராடும் வல்லமை இல்லாதவர்களும், மற்றும் உறப்பினர்கள் குறைந்த போராளிக் குழுக்களையும், தமிழீழ விடுதலைப் புலிகளையும் ஒரே தராசில் வைத்து இந்திய புலனாய்வுப் பிரிவினர் பார்ப்பதில் அவருக்கு உடன்பாடு இல்லை.

இந்தியாவில் இருக்கும் போது தனிமைப்படுத்தப்பட்டு, தனித்துவிடவும் விரும்பவில்லை. ஈழத் தேசிய இடதுசாரி முன்னணி கூட்டங்களில் பிரபாகரனின் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கமே எல்லாப் பேச்சுக்களையும் விடுதலைப் புலிகள் சார்பில் பேசி வந்தார்.

பாலசிங்கம் பேசும் போது பிரபாகரன் அமைதியாக இருப்பார். ஏதாவது பேச்சில் தலையிட வேண்டும் என்றால்தான் சில வார்த்தைகள் சொல்லுவார். பிரபாகரன் அமைதியாக இருந்து ஏதாவது வேறு விடயங்களில் அவரது கவனத்தை ஈடுபடுத்திக் கொண்டிருந்தாலும் சகல விடயங்களையும் அவர் உள்வாங்கிக் கொண்டே இருப்பார். ஈழமக்கள் இடதுசாரி முன்னணிக்கும், ஈழமக்கள் புனர்வாழ்வு இயக்கத் தலைவர்களுக்கும் இடையில் காரசாரமான விவாதம் ஒன்று நடைபெற்றது. அப்பொழுது பிரபாகரன் தலையிட்டு அவர்கள் இருவரும் பேசிய பேச்சை தத்ரூபமாக திருத்திக் கூறி சகலரையும் ஆச்சரியப்பட வைத்தர்.

இந்த ஈழத் தேசிய இடதுசாரி முன்னணி கூட்டங்களில் பாலசிங்கம் பேசும் போது இடையில் தனது பேச்சை நிறுத்தி "என்ன தம்பி?", "என்ன சொல்கிறீர்கள்?" எனக் கேட்பார். வழமை போல பிரபாகரன் தலையாட்டுவார். இதிலிருந்து தெரிவது என்னவென்றால் இருவருமே பரஸ்பரம் புரிந்துணர்வுடன் இயங்கி வந்தார்கள் என்பது தான். பிரபாகரன் என்ன நினைக்கின்றாரோ அதனைத்தான் பாலசிங்கம் கூட்டத்தில் சொல்லி வந்தார். ஈழத் தேசிய இடதுசாரி முன்னணியின் கூட்டம் ஒரே இடத்தில் நடைபெறுவதில்லை. பாதுகாப்பு காரணமாக இடம் மாறிக் கொண்டே இருக்கும்.

ஒரு முறை இந்தக் கூட்டம் சென்னையில் தமிழீழ விடுதலைப் புலிகளின் காரியாலயத்தில் நடைபெற்றது. அப்போது திடீரென மின்சாரம் தடைப்பட்டது. எங்கும் கும்மிருட்டுக் கவ்வியது. ஒரு நிமிடம் கூட ஆகவில்லை திடீரென்று பிரபாகரன் 'டோர்ச் லைற்றை' அடித்தார்.

இது சம்பந்தமாக ஒரு ஈழத் தேசிய இடது சாரி முன்னணித் தலைவர் குறிப்பிடுகையில் நாங்கள் எல்லோருமே பிரபாகரன் டோர்ச் லைற்றை அடிப்பதைப் பார்த்து ஆச்சரியப்பட்டோம். இது அவரது முன்னெச்சரிக்கையையும், முன் ஏற்பாட்டையும் காட்டுகிறது. நாங்கள் இவ்வாறான முன்னெச்சரிக்கை வேலைகளில் ஈடுபட்டிருக்க மாட்டோம் எனக் கூறினார்.

அந்தக் காரியாலயத்தில் மின்சாரம் தடைப்பட்டிருந்த போது அங்கு கூடியிருந்தவர்களைப் பார்த்து பயந்து விட்டீர்களா? எனக் கேட்டார். அப்போது ஒருவர் நாங்கள் இல்லை நீங்கள் தான் பயந்து அறைக்குள் ஒழிந்து விட்டீர்கள் எனக் கூறினார். அதற்கு பிரபாகரன் வழமை போல புன்சிரிப்பு சிரித்தார்.

ஒரு முறை ஈழத் தேசிய இடதுசாரி முன்னணி தலைவர்களில் ஒருவரை "குறி பார்த்து சுடும்" போட்டிக்கு பிரபாகரன் அழைத்தார். சென்னையிலுள்ள காரியாலயத்தில் இந்தப் போட்டியை வைக்கலாம் எனக் கூறினார்.

பிரபாகரனின் குறி பார்த்துச் சுடும் தன்மையைப் பற்றி அவரது சகாக்களில் ஒருவர்



குறிப்பிடுகையில் சின்ன ஊசி போடும் மருந்துப் போத்தலை ஒரு மரக் கிளையில் வைத்தால்கூட அவரால் குறிபார்த்துச் சுட முடியும் என பெருமையாகக் கூறினார்.

ஈழத் தேசிய இடதுசாரி முன்னணி பிளவு படுவதற்கு முன்னர் அதன் தலைவர்கள் பலர் அவரை சென்னையிலுள்ள காரியாலயத்தில் சந்திப்பார்கள். அப்போது புலிகளிடம் அதி சக்தி வாய்ந்த தொலைத்தொடர்பு சாதனங்கள் இருந்தன. மற்ற போராளிக் குழுக்களைச் சேர்ந்த யாராவது இலங்கையிலுள்ள அவர்களுடைய உறுப்பினர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டும் என்றால் தமிழீழ விடுதலைப் புலிகளின் தொலைத்தொடர்பு சாதனம் மூலம் தொடர்பு கொள்ள பிரபாகரன் அனுமதி வழங்கினார்.

பிரபாகரன் காரியாலயத்தில் இருக்கும் நேரங்களில் எல்லாம் சாரமும், சட்டையும் தான் அணிந்திருப்பார் என்றும், எப்போதும் இயந்திரத் துப்பாக்கிகள் மற்றும் ஏனைய துப்பாக்கிகள் சம்பந்தப்பட்ட சஞ்சிகையைத் தான் பார்த்துக் கொண்டிருப்பார். இன்றேல் போராட்டம் சம்பந்தமான ஏதாவது காணொளி பார்த்துக் கொண்டிருப்பார் எனத் தெரிவித்தனர். பிரபாகரன் தன்னைப் பாதுகாக்க எடுத்துக் கொண்ட அந்த முன்னெச்சரிக்கை முறை எப்போதும் அவரைக் கைவிடவில்லை.

யாழ்ப்பாணத்தில் அவருடைய தங்கும் இடங்கள் எல்லாம் பொலிஸ் நிலையங்களுக்கு அருகில் தான் அமைத்திருந்தார். அவர் தங்கும் இடங்களுக்கு அமைதியாகச் சென்று யாரும் கண்டு கொள்ளாதவாறு திரும்பி வருவார்.

எப்போதுமே அவர் சோடா குடிப்பதாயின் மூடி கழற்றப்படாமல் இருந்தால் தான் குடிப்பார். 1987 களில் ஈரோஸ் தலைவர் பாலகுமார் பிரபாகரனுக்கு கொக்கோ கோலாக்களைக் கொடுப்பார். ஒரு முறை ஈரோஸைச் சேர்ந்தவர்கள் 3 கொக்கோ கோலாப் போத் தல்களை தட்டில் வைத்துக் கொண்டு வந்தார்கள். அதனை எடுத்துக் குடிக்குமாறு பிரபாகரனுக்கு பாலகுமார் கூறினார். பிரபாகரன் எடுத்துத் திறந்து 1 போத்தலை பாலகுமாருக்கு கொடுத்தார். மீதிப் போத்தல்களை தனது உதவியாளருக்குக் கொடுத்தார்.

தமிழீழ விடுதலைப் புலிகள் ஈழத் தேசிய இடதுசாரி முன்னணியில் சேரும் அந்தச் சந்தர்ப்பத்தில் இலங்கையில் பயங்கரமான வன்செயல்கள் வெடித்தன. அதையடுத்து எல்லா போராளிக் குழுக்களும் அரச படையினரை எதிர்த்து போராடினார்.

அந்தக் காலத்தில் இஸ்ரேலினால் பயிற்சியளிக்கப்பட்ட இலங்கை இராணுவத்தினரை சட்டை செய்யாமல் போராளிக் குழுக்கள் நேரடியாக போராட்டத்தில் ஈடுபட்டார்கள்.

மே மற்றும் ஏப்ரல் மாதங்களில் தீவிரமான போராட்டங்கள் இலங்கை இராணுவத்திற்கும், போராளிக் குழுக்களுக்குமிடையில் நடைபெற்றன. இந்தப் போராட்டம் மூலம் இறப்புக்களும், இழப்புக்களும் அதிகமாக ஏற்பட்டன.

இலங்கை இராணுவத்தால் 70 பொது மக்கள் வல்வெட்டித்துறையில் கொல்லப்பட்டனர். பிரபாகரனதும், ஏனைய விடுதலைப் புலித் தலைவர்கள் பலரது வீடுகள் சேதமாக்கப்பட்டன. விடுதலைப் புலிகள் மத்தியில் கோபத்தையும் வெப்பியாகாரத்தையும் உருவாக்கிற்று. இலங்கை இராணுத்தை பழிவாங்குவதற்கு 1985 ஆம் ஆண்டு மே மாதம் 14 ஆம் திகதி விடுதலைப் புலிகள் இராணுவ உடை தரித்து அநுராதபுரத்திற்கு பஸ் வண்டியில் வந்திறங்கினார்கள். பஸ் வண்டி அநுராதபுரத்தை வந்தடைந்த போது அவர்கள் துப்பாக்கிகளால் சுடத் தொடங்கினாார்கள். டசின் கணக்கான அப்பாவி மக்களை சுட்டு வீழ்த்தினார்கள்.

அதையடுத்து பழைய புனித அரச மரம் இருந்த இடத்திற்கு சென்றர்கள். அங்கு

**அரசகேசரி**

குழுமியிருந்த பல புத்த துறவிகளையும், வெள்ளை ஆடை தரித்து வழிபாடு செய்ய வந்த பொதுமக்களையும் நோக்கி துப்பாக்கி பிரயோகம் செய்து சுட்டு வீழ்த்தினார்கள். இவ்வாறு பயங்கர வன்செயல்களைச் செய்து விட்டு போகும் போது பொலிஸ் நிலையத்தையும் தாக்கி விட்டு சென்றார்கள்.


அநுராதபுரத்தில் நடைபெற்ற படுகொலையில் 146 பொதுமக்கள் கொல்லப்பட்டனர். ஆனால் அந்தத் தாக்குதலில் தமிழீழ விடுதலைப் புலிகளைச் சேர்ந்த யாருமே எந்தவிதமான காயமும் ஏற்படாமல் தப்பிச் சென்றார்கள்.

அந்த படுகொலைக்கு எந்தப் போராளிக் குழுக்களுமே பொறுப்பேற்க முன் வரவில்லை. புளொட் அமைப்பும், ஈழத் தேசிய இடதுசாரி முன்னணியும் அந்தப் படுகொலையில் சம்பந்தமே இல்லை எனக் கூறினார்கள்.

இறுதியில் தமிழீழ விடுதலைப் புலிகள் தான் காரணம் என்ற கருத்து மேலோங்கிற்று. இதற்கு முந்தைய வருடம் தான் தமிழீழ விடுதலைப் புலிகள் 2 கிராமப்பகுதிக்கு சென்று 126 பொதுமக்களை சுட்டு வீழ்த்தினார்கள்.

(தொடரும் ...)

# தமிழ் தலைவர் அமிர்தலிங்கத்தை நினைவு கூருங்கள்



முன்னாள் தமிழர் ஐக்கிய விடுதலை அமைப்பின் செயலாளர் நாயகமும், தமிழர் தலைவர்களில் ஒருவருமான அப்பாபிள்ளை அமிர்தலிங்கத்தின் 27 ஆவது நினைவு தினம் எதிர்வரும் 13 யூலை வருகிறது.

அப்பாபிள்ளை அமிர்தலிங்கம் சிறந்த ஒரு அரசியல் தலைவர், சிறந்த தமிழ் பேச்சாளர், தமிழ் மக்களின் நம்பிக்கைக்கும் பண்புக்கும், பாத்திரமானவர்.

அமிர்தலிங்கம் 1927 ஆம் ஆண்டு, ஆகஸ்ட் மாதம் 27 ஆம் திகதி வட்டுக் கோட்டைக்கு அடுத்துள்ள பண்ணாகம் என்ற கிராமத்தில் பிறந்தார். இவர் அப்பா பிள்ளை, வள்ளியம்மையின் புதல்வராவார். இவரது தந்தை அப்பாபிள்ளை ரயில்வே நிலைய பொறுப்பதிகாரியாக இருந்தார் (Station master). அமிர்தலிங்கத்திற்கு மூன்று - சகோதரர்கள் சொக்கலிங்கம், வாசு தேவலிங்கம், திகம்பரலிங்கம் ஆவார்கள்.

ஆரம்பக் கல்வியை பண்ணாகம் மெய் கண்டான் தமிழ் பாடசாலையிலும், பின்னர் சுழிபுரத்தில் உள்ள விக்ரோறியா கல்லூ ரியிலும் கல்வி கற்று அதன் பின் இங்கை பல்கலைக்கழகத்தில் பட்டப்படிப்பை நிறை வேற்றி சட்டத்தரணியாக வெளியே வந் தார்.

அமிர்தலிங்கம் மங்கயர்கரசியை மண முடித்தார். காண்டீபன், பகீரதன் என்ற இரண்டு ஆண் பிள்ளைகள் அவருக்கு உண்டு.

அமிர்தலிங்கம் எஸ். ஜே. வி. செல்வ நாயகத்தினால் 1949 ஆம் ஆண்டு ஆரம் பிக்கப்பட்ட இலங்கை தமிழ் அரசு கட்சியில் சேர்ந்தார். அதன் பின் அந்தக் கட்சியின் இளைஞர் அமைப்பின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார்.

அவர் 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டார். அந்த தேர்தலில் வெற்றி பெறும் சந்தர்ப்பத்தை இழந்தார்.

அவர் 1952 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டார். அந்த தேர்தலில் வெற்றி பெறும் சந்தர்ப்பத்தை இழந்தார்.

அதையடுத்து 1960 மார்ச், 1960 யூலை, 1965 ஆம் ஆண்டுகளில் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் வெற்றி பெற்றார்.

1970 ஆம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் இலங்கை தமிழர் கட்சி சார்பில் வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் போட்டியிட்டார். ஆனால் அந்த தேர்தலில் காரைநகர் இந்து கல்லூரியின் அதிபர் ஆ. தியாகராசாவும் போட்டியிட்டார். அதனால் அம்ர்தலிங்கம் வெற்றி பெறும் சந்தர்ப்பத்தை இழந்தார்.

தேர்தலில் வெற்றி பெறும் சந்தர்ப்பத்தை இழந்த அமிர்தலிங்கம் இலங்கை தமிழர் கட்சி, இலங்கை தமிழர் காங்கிரஸ், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஆகிய கட்சிகளை இணைத்து தமிழர் ஜக்கிய விடுதலை முன்னனி என்ற கட்சியை உருவாக்கினார்.

1976 ஆம் ஆண்டு, தமிழீழ விடுதலை சார்பில் அன்றைய நாடாளுமன்ற உறுப் பினர் எம். சிவசிதம்பரம், வி.என் நவரட் ணம், கே. துரைரட்ணம் ஆகியோர் துண் டுப்பிரசுரம் விநியோகிக்கும் போது கைது செய்யப்பட்டார்கள். இவர்களது கைதை யடுத்து எம். சிவசிதம்பரம் விடுதலை செய் யப்பட்டார். மீதி அனைவரும் கொழும் புக்கு கொண்டு செல்லப்பட்டு தேச விரோத குற்றச்சாட்டின் கீழ் வழக்கு பதிவு செய்யப் பட்டது.

Trail At Bar என்று அழைக்கப்பட்ட வழக்கு முறையில் அமிர்தலிங்கத்திற்கும் மற்றவர்களுக்கும் எதிராக வழக்கு தொடரப் பட்டது. இந்த வழக்கில் எஸ்.ஜே. வி. செல்வ நாயகம், ஜி.ஜி. பொன்னம்பலம் உட்பட 72 சட்டத்தரணிகள் இவர்களுக்காக நீதி மன்றத்தில் தோன்றினார்கள். இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டு சகலரும் விடு தலையானார்கள்.

எஸ்.ஜே.வி. செல்வநாயகம், ஜி.ஜி. பொன்னம்பலம் ஆகிய தலைவர்கள் கால மானதை அடுத்து 1977 ஆம் ஆண்டு ஏப்ரல் தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவர் பொறுப்பை அமிர்தலிங்கம் ஏற் றுக்கொண்டார். அதையடுத்து 1977 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர் தலிலே காங்கேசன்துறை தொகுதியில் போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

அன்றைய நாளில் ஜே. ஆர். தலை மையில் இருந்த ஐக்கிய தேசிய கட்சியை அடுத்து தமிழர் ஐக்கிய முன்னணியே பெரும்பாலான உறுப்பினரை கொண்ட கட்சியாக இருந்தது. அதை அடுத்து அமிர்த லிங்கம் (முதல் தமிழன்) எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்பட்டார்.

1982 ஆம் ஆண்டு அன்றைய ஜனாதிபதி தேர்தல் இல்லாமல் நாடாளுமன்ற காலம் மேலும் 6 வருடங்களுக்கு நீடித்த போது அதை எதிர்த்து தமிழர் ஐக்கிய முன்னணி தங்கள் நாடாளுமன்ற பதவியை துறந் தார்கள். மேலும் அரசியல் சாசனத்தில் கொண்டு வரப்பட்டு 6 ஆம் திருத்தத்தின் படி சத்தியப் பிரமாணம் எடுக்க அவர்கள் முன்வராததால் 1983 ஆம் ஆண்டு தங்கள் நாடாளுமன்ற பதவியை இழந்தனர்.

அமிர்தலிங்கம் மூன்று மாதம் நாடாளு மன்ற கூட்டத்திற்கு தொடர்ந்து சமூக மளிக்காததால் அவர் தனது பதவியை 22 ஆகஸ்ட் 1983 ஆம் ஆண்டு இழந்தார்.

அமிர்தலிங்கம் தனது மனைவி மங்க யற்கரசி மகன் பகீரதனுடன் நாட்டின் நிலைமை மோசமடைந்ததை அடுத்து சென்னை சென்று வாழத் தொடங்கினார். இந்தியாவில் இருந்த காலத்தில் அமிர்த லிங்கம் பல சமாதான பேச்சுக்களில் பங்கு பற்றினார்.

1987 ஆம் ஆண்டு யூலை மாதம் இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டது. அதையடுத்து அமிர்தலிங்கம் இலங்கை திரும்பினார். வந்தவர்கள் கொழும்பு கறுவாத் தோட்டத்தில் உள்ள புள்ளோஸ் வீதியில் உள்ள வீடு ஒன்றை வாடகைக்கு எடுத்து வாழ்ந்து வந்தார். அந்த வீட்டில் அவருடன் சேர்ந்து தமிழர் ஐக்கிய முன்னணியின் தலைவரான எம். சிவசிதம்பரம், யோகேஸ்வரன், மாவை சேனாதிராஜா, ஆனந்த சங்கரி ஆகியோர் கூடவே இருந்தார்கள்.

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தலில் மட்டக்களப்பு தேர்தல் தொகுதியில் அமிர்தலிங்கம் போட்டியிட்டார். ஆனால் அவரால் வெற்றி பெற முடியவில்லை. அதையடுத்து தேசிய பட்டியல் ஊடாக நாடாளுமன்றத்திற்கு நுழைந்தார்.

இந்த சந்தர்ப்பத்தில் தான் தமி ழர் மத்தியில் ஒற்றுமையை உருவாக்க அமிர்த லிங்கத்துடன் கூட இருந்த நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர் யோகேஸ்வரன் தமிழீழ விடுதலைப் புலிகளை பல முறை சந்தித்து பேசினார். அதையடுத்து அமிர்த லிங்கம், சிவசிதம்பரம் போன்ற அரசியல் தலைவர்கள் தமிழீழ விடுதலை புலிகளின் பிரதிநிதிகளை அவர்கள் புள்ளோஸ் வீதியில் உள்ள வீட்டில் சந்திக்கும் கூட்டத்தை யோகேஸ்வரன் ஒழுங்கு செய்தார்.

அந்த கூட்டத்தில் 13 ஆம் திகதி யூலை 1989 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலை புலிகளை சேர்ந்த பீற்றர் அலோசியஸ் லியோன், விசு (ராசையா, அரவிந்த, ராசா), சிவகுமார் (விக்னட், அறிவு) ஆகிய மூவரும் அமிர்தலிங்கம் இருந்த வீட்டிற்கு வந்தார்கள். அவ்வாறு வந்தவர்களில் சிவகுமார் வீட்டின் வெளியே நின்று கொண்டார். மற்ற இருவரும் யோகேஸ்வரனை சந்தித்தனர். அப்பொழுது அமிர்தலிங்கமும், சிதம்பரமும் யோகேஸ்வரன் தங்கியிருந்த முதல் மாடியில் இருந்தார்கள். எனவே விசுவையும், பீற்றர் அலோசியஸ் யோகேஸ்வரன் தான் தங்கி யிருந்த மாடிக்கு அழைத்தார். அமிர்தலிங் கத் தையும், சிவசிதம்பரத்தையும் சந்திக்க வைத்தார்.

ஆரம்பத்தில் கூட்டம் சீராக நடை பெறுவது போல் இருந்தது. திடீர் என்று பேச்சுவார்த்தைக்கு வந்த தமிழீழ விடு தலைப்புலி உறுப்பினரான விசு எழுந்து நின்று அமிர்தலிங்கத்தின் நெஞ்சிலும் தலையிலும் குறிபார்த்து சுட்டார். அப்பொழுது அதிர்ச்சி அடைந்த யோகேஸ்வரன் எழுந்து நிற்க முற்பட்ட போது அலோசியஸ், விசு வாலும் துப்பாக்கிப் பிரயோகம் செய்யப் பட்டார்.


சிவசிதம்பரத்தின் தோள்களில் சூட்டு காயங்கள் ஏற்பட்டன. அவர்கள் சுட்டு விட்டு படிகளால் கீழே இறங்குகின்ற பொழுது, துப்பாக்கி பிரயோக சத்தம் கேட்டு அங்கு நின்ற பாதுகாப்பு படையினர் ஓடிவந்து தமிழீழ விடுதலைப் புலி உறுப்பினரான விசுவையும் அலோசியஸ்சையும் சுட்டு விழுத்தினர். அதே போல் வீட்டிற்கு வெளியே நின்ற சிவகுமாரையும் பாதுகாப்பு படையின் சுட்டார்கள். பலத்த காயங்கள் ஏற்பட்டு பின் உயிர் இழந்தான்.

துப்பாக்கி பிரயோகத்தில் அமிர்தலிங்க மும் யோகேஸ்வரனும் இறந்து போனார் கள். சிவசிதம்பரம் காயங்களுடன் உயிர் தப் பினார்.

ஆரம்பத்தில் அமிர்தலிங்கத்தின் கொலைக்கும் விடுதலை புலிக்கும் எந்தவித தொடர்பும் இல்லை என்று மறுத்தார்கள். பின்னர் அந்த கொலைக்கு தாங்கள் பொறு ப்பு என்று ஏற்றுக் கொண்டார்கள்.

இப்பொழுது அமிர்தலிங்கம் எம் மத்தி யில் இல்லை, அவரது மனைவி மங் கயற்கரசியும் எம் மத்தியில் இல்லை. இவர் கள் இருவரும் தமிழ் மக்களுக்கு ஆற்றிய சேவை மிகப் பெரியது.

எனவே அமிர்தலிங்கத்திற்கு ஆகக் குறைந்தது நினைவு முத்திரையாவது வெளியிட வேண்டும் என்று தினச்செய்தி கேட்டுக்கொள்கிறது.



# சிறுவர் பக்கம்

# காரணம் யார்?

நீண்ட காலத்திற்குப் பிறகு தன் பள்ளி ஆசிரியரை தற்செயலாகச் சந்தித்தான் ஒருவன். ஆசிரியருக்கும் தன் பழைய மாணவனைச் சந்தித்ததில் மகிழ்ச்சி. இருவரும் பல்வேறு விஷயங்களைப் பற்றிப் பேசி மகிழ்ந்தார்கள்.

பழைய மாணவன் ஆசிரியரிடம், "உங்களிடம் படித்த மாணவர்கள் எல்லோரும் ஒரே மாதிரியான முன்னேற்றம் அடைவதில்லையே....., சிலர் தாழ்ந்தும், சிலர் உயர்ந்தும் இருக்கிறார்களே அது ஏன்?" என்று கேட்டான்.




"ஆசிரியர்களுக்கு எரிச்சலூட்டும், ஏமாற்றமூட்டும் கேள்விதான் இது! என்றாலும் நான் இதற்காக வருத்தமோ கோபமோ அடையவில்லை. ஓர் உதாரணம் சொல்கிறேன் கேள்"

"சொல்லுங்கள் ஐயா"

"தூண்டில் போட்டு மீன் பிடிக்கக் கற்றுக் கொள்கிறார்கள் இருவர். ஒருவன் ஆறு, குளம், ஏரிகளில் தூண்டில்போட்டு ஏராளமான மீன்களைப் பிடித்து சந்தோஷமாக வாழ்கிறான். மற்றவன் செயற்கையான நீச்சல் குளத்தில் தூண்டிலைப் போட்டு விட்டுக் காத்திருக்கிறான். மீன்கள் சிக்கவில்லை என்று அழுகிறான். கற்ற கல்விக்குச் சரியான இடத்தைத் தேர்ந்தெடுத்துப் பயன்படுத்திக் கொள்பவன் சிறப்படைகிறான்., தவறான இடத்தைத் தேர்ந்தெடுப்பவன் சிறுமையடைகிறான்.. இவ்வளவே!"

புரிந்து கொண்டதற்கு அடையாளமாகத் தலையாட்டினான் அந்தப் பழைய மாணவன்!



# வாரமொரு குறள்

*குறள் 35:*

*அன்றறிவாம் என்னாது அறஞ்செய்க மற்றது*
*பொன்றுங்கால் பொன்றாத் துணை.*

**பொருள் :**

பிறகு பார்த்துக்கொள்ளலாம் என்று நாள் கடத்தாமல் அறவழியை மேற்கொண்டால் அது ஒருவர் இறந்தபின் கூட அழியாப் புகழாய் நிலைத்துத் துணை நிற்கும்.

# இசை மொழிகள்

- இசை உண்டாக்கும் இன்பம் இல்லாமல் மனிதன் வாழ முடியாது.
  - கன்பூஷியஸ்
- துன்பத்தை துடைப்பதற்கே இசை உண்டாக்கப்பட்டது.
  - ஷேக்ஸ்பியர்
- உள்ளத்தில் அமைதி உடையவரே இசையின் இன்பத்தை அறிவர்.
  - போப்
- இசையே எல்லா நாட்டு மக்களுக்கும் பொதுவான மொழி.
  - ரோஜர்ஸ்
- கேட்ட இசை இனிது. கேளாத இசை அதனினும் இனிது.
  - கீட்ஸ்
- தேவ தூதர்கள் பேசும் மொழி இசை.
  - கார்லைல்


# பெரியோர் வாழ்வில்...



"சிறுகதை மன்னன்" எனப் புகழ்பெற்ற புதுமைப் பித்தனிடம், ஒருவர் தமது பத்திரிகையின் அட்டைப் படமாக வெளியிட விரும்பி அவருடைய புகைப்படத்தைக் கேட்டார். புதுமைப்பித்தன் அவரிடம், "படம் எதுவும் கைவசம் இல்லை...", படமெடுத்துத் தர வசதியும் இல்லை" என்றார். வந்தவர் நம்பவில்லை. வற்புறுத்திப் படம் கேட்டார்.

"கண்டிப்பாய் வேண்டுமென்றால் சமீபத்தில் எடுத்த எக்ஸ்ரே படமிருக்கிறது. அதை வேண்டுமானால் பிரசுரியுங்கள்" என்றார் புதுமைப்பித்தன் சிரித்துக்கொண்டே! அப்போது அவருக்கு காசநோய் முற்றியிருந்தது.

# ஆறு வித்தியாசங்கள்





ஆறு வித்தியாசங்களை கண்டு பிடித்து

**தினச்செய்தி**
தில்லைக்கட்டி வீதி,
சுன்னாகம்.

எனும் முகவரிக்கு எழுதி அனுப்பி வையுங்கள்.



# குறுக்கெழுத்துப் போட்டி - 9

## குறுக்கெழுத்துப் போட்டி இல. 9

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | | ■ | 4 |
| 5 | | | ■ | 6 | |
| | ■ | 7 | 8 | ■ | |
| ■ | 9 | | | ■ | |
| 10 | | | ■ | 11 | |
| ■ | | ■ | 12 | | ■ |

**இடமிருந்து வலம்**

1. புதையலெடுக்க இது கொடுப்பார்களாம்.
5. இருப்பதற்கு உதவுவது.
6. காற்று
7. கணவன்
9. அரிசி இனத்தில் ஒன்று.
10. தாய்க்குப் பின் இவள் (குழம்பியுள்ளது)
11. இது வந்தால் பத்தும் பறந்து போகும்.
12. தினை விதைத்தவன் தினை அறுப்பான், இதை விதைத்தவன் ...

**மேலிருந்து கீழ்**

1. சதையும் இதுவும் பிரியாதது.
2. அழகான பெண்ணை இப்படிக் கூறுவர்.
3. வாரிசு (குழம்பியுள்ளது)
4. யுத்தத்தால் அழிந்த நகரம்.
8. ஒன்றின் அரைப்பங்கு. (தலைகீழ்)
9. அமெரிக்காவால் வேட்டையாடப்பட்ட தலைவர்.
11. கற்பகதரு.

குறுக்கெழுத்துப் போட்டியின் சரியான விடைகளை எழுதி தபால் அட்டையில் ஒட்டி உங்கள் பெயர், முகவரியுடன் ஜூலை 14 ஆம் திகதிக்கு முன்னர் எமது முகவரிக்கு அனுப்பி வைக்கவும். சரியான விடை எழுதிய ஐந்து அதிர்ஷ்டசாலிகளின் பெயர் 16.07.2016 ஆம் திகதி வாரமலரில் பிரசுரமாகும்.

## குறுக்கெழுத்துப்போட்டி - 7 இன் விடைகள்

**இடமிருந்து வலம்**

1. விகடகவி
5. கண்டி
6. மல்லி
7. வா
11. வல்லினம்
15. கரோல்

**மேலிருந்து கீழ்**

2. கடல்
3. கண்
4. கவிதை
6. மனம்
7. வில்லி
9. கவலை
12. வாலி
13. ரோம்

## சரியான விடையை எழுதியவர்கள்

1. இ. மதுமிலா, சங்கத்தானை, சாவகச்சேரி
2. க. சுதர்ஷன், புகையிரத நிலையம், சுன்னாகம்.
3. ம.வேலாயுதபிள்ளை, புளியம் பொக்கணை, பரந்தன்
4. பு. நிகிதா, கொக்குவில் மேற்கு, கொக்குவில்
5. ஆர். கஸ்தூரி, துர்க்காபுரம், தெல்லிப்பழை.

**அனுப்ப வேண்டிய முகவரி:**

பெயர் : ..........................................
முகவரி : ..........................................
..........................................

**குறுக்கெழுத்துப் போட்டி இல. 9**
**தினச்செய்தி வாரமலர்,**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**



## ஹொலிவூட்டில் ரஜினியும் ஜாக்கியும்

ரஜினிகாந்தையும் ஜாக்கிசானையும் இணைந்து நடிக்க வைக்க பேச்சு வார்த்தைகள் நடப்பதாக கூறப்படுகிறது. இந்த செய்தியை மலேசியாவில் உள்ள பத்திரிகைகள் தலைப்பு செய்தியாக வெளியிட்டு உள்ளன. கபாலியின் பெரும்பகுதி படப்பிடிப்பு மலேசியாவில் நடந்தது. இதற்காக ரஜினிகாந்த் பல வாரங்கள் அங்கு தங்கி இருந்தார். அப்போது ஹொலிவூட் படம் குறித்து அவரிடம் பேசப்பட்டதாக தகவல்கள் வந்துள்ளன. இந்த படத்துக்கு "ஷினிசாஹா" என்று பெயர் வைத்து இருப்பதாகவும் மலேசியாவை சேர்ந்த முகமது ரபிஜி முகமத்ஜின் என்பவர் அதிக பட்ஜெட்டில் இதனை தயாரிக்க உள்ளதாகவும் கூறப்படுகிறது. ஷினி என்பது மலேசியாவில் ஓடும் பிரபல நதியின் பெயர் ஆகும். அந்த நதிக்குள் வசிக்கும் ஒரு டிராகனை பற்றிய கதையே இந்த படம். 90 சதவீதம் கிராபிக்ஸ் காட்சிகளுடன் இந்த படத்தை தயாரிக்கின்றனர். மலேசியாவை சேர்ந்த பல நடிகர்கள் இதில் நடிக்க உள்ளனர். கதாநாயகியாக நடிக்க இந்தி நடிகை சோனம் கபூரிடம் பேசி இருப்பதாகவும் அவர் சம்மதம் சொல்லி விட்டதாகவும் கூறப்படுகிறது.



## விஜயின் தீபாவளி சென்டிமென்ட்

விஜய்க்கும் தீபாவளிக்கும் என்ன ராசியோ... அன்று ரிலீஸாகும் அவரது படங்கள் பெரும்பாலும் ஹிட் அடித்துவிடும். கத்தி, துப்பாக்கி, வேலாயு தம், சிவகாசி, திருமலை என தீபாவளிக்கு வெளியான அனைத்து படங்களுமே ஹிட் தான். அந்த சென்டிமெண்டுக்காகவே விஜய், பரதன் இணைந் திருக்கும் விஜய் 60 தலைப்பு "எங்க வீட்டுப் பிள்ளை"? படத்தை தீபாவளிக்கே ரிலீஸ் செய்ய பரபரப்பாக ஷுட்டிங் நடந்து கொண்டிருக்கிறது. இது தவிர இன்னொரு சென்டிமெண்டும் ஓடுகிறது. அதாவது ஒரே ஆண்டில் இரண்டு விஜய் படங்கள் ரிலீஸ் ஆனால் இரண்டுமே ஹிட் அடிக்கும் அல்லது இரண்டில் ஒன்றாவது சூப்பர் ஹிட் அடிக்குமாம். ஆனால் ஒரே ஒரு படம் மட்டும் ரிலீஸ் ஆனால் அந்த படம் தோல்வி தானாம்.

## அஜித்தை முந்திய சிவா

திரைப்படத்
ஜங்கரன் இன்
முன்னணி நடி
எவ்வளவு விலை
ருக்கிறது. இதில் 30
22 கோடிகளுடன் விஜய் 2 வது
சூர்யா 20 கோடிகளுடன் 3 வது
4 வது இடத்திலும் இருக்கின்றன
கோடிகளுடன் 5 வது இடத்திலு
வது இடத்திலும் இருக்கிறார்
விக்ரம் 7 வது இடத்தை
களுடன் சிம்பு கடைசி
இருக்கிறார்.



## மாமனா ஆகிறார் விக்ரம்

திரைப்பட நடிகர் விக்ரம் திமுக தலைவர் கருணாநிதி குடும்பத்துடன் சம்பந்தம் வைக்க உள்ளார். விக்ரமின் மாப்பிள்ளையாகப் போகிறார் கருணாநிதியின் கொள்ளுப் பேரன் மனு ரஞ்சித். நடிகர் விக்ரமுக்கு துருவ் என்ற மகனும் அக்ஷிதா என்ற மகளும் உள்ளனர். இதில் விக்ரமின் மகள் அக்ஷிதாவுக்கு திருமண ஏற்பாடுகள் நடந்து வருகிறது. விக்ரமுக்கு மருமகனாக வர இருப்பவர் கவின்கேர் ராங்கநாதனின் மகன் மனு ரஞ்சித். இவர் கருணாநிதியின் கொள்ளுப் பேரனும், கருணாநிதியின் மகன் மு.க. முத்துவின் பேரனும் ஆவார். இவர்களின் திருமண நிச்சயதார்த்தம் ஜுலை 10 ஆம் தேதி சென்னையில் உள்ள மிகப்பெரிய நட்சத்திர ஹோட்டலில் நடைபெறும் எனவும், இவர்களின் திருமணம் அடுத்த ஆண்டு நடைபெறும் எனவும் கூறப்படுகிறது. இது குறித்த அதிகாரபூர்வ தகவல்கள் விரைவில் வெளியாகும் என்று எதிர்பார்க்கப் படுகிறது.





## நிறை குறைந்த லக்ஷ்மி ராய்

பத்து வருடங்களுக்கும் மேலாக நடித்து வந்தாலும் இன்னமும் அதே இளமையோடுதான் இருக்கிறார் லக்ஷ்மி ராய். 49 படங்களில் நடித்து விட்ட லக்ஷ்மி ராய், 50 ஆவது படமாக 'ஜுலி 2' என்ற இந்திப் படத்தில் நடித்து வருகிறார். படத்தில் பிகினி, டாப்லெஸ் சீன்களில் எல்லாம் நடிக்க வேண்டி இருப்பதால், தனது உடல் எடையை இரண்டு மாதங்கள் கடுமையாக உடற்பயிற்சி செய்து 10 கிலோ வரை குறைத்து இருக்கிறார்.

து

திரைப்படத் துறையில் 25 ஆண்டுகளாக இருக்கும்
ஐங்கரன் இன்டர்நேஷனல் நிறுவனம் சமீபத்தில்,
முன்னணி நடிகர்கள் நடித்த படங்கள் வெளிநாடுகளில்
வளவு விலை போகின்றன என்ற விவரத்தை வெளியிட்டி
து. இதில் 30 கோடிகளுடன் ரஜினி முதலிடத்தையும்
விஜய் 2 வது இடத்தையும் கைப்பற்றியுள்ளனர்.
களுடன் 3 வது மற்றும் கமல் 15 கோடிகளுடன்
ம் இருக்கின்றனர். சிவகார்த்திகேயன் 10
வது இடத்திலும், அஜித் 8 கோடிகளுடன் 6
இருக்கிறார் 7 கோடிகளுடன்
இடத்தை யும் 6 கோடி
கடைசி இடத்திலும்
ர்.

## எங்கிருந்தாலும் வாழ்க!





சஞ்சய் தத்தின் வாழ்க்கை வரலாற்றை ரன்பீர் கபூர் நடிப்பில் படமாக எடுக்கிறார் ராஜ்குமார் ஹிரானி. சஞ்சய் தத்துக்குப் பல காதல் கதைகள் இருந்ததாம். அதில் ஒன்றுதான் மாதுரி தீட்சித் காதலும். படம் எடுப்பதைக் கேள்விப்பட்ட மாதுரி தீட்சித், இயக்குநருக்கு போன் செய்து என் சம்பந்தப்பட்ட காட்சிகளைப் படத்தில் வைக்க வேண்டாமே என வேண்டுகோள் விடுக்க, அது சஞ்சய் தத் காதுக்கும் போயிருக்கிறது. மாதுரியின் குடும்ப வாழ்க்கைக்கு என்னால் எந்த பாதிப்பும் வரக் கூடாது என சொல்லி அந்தக் காட்சிகளை நீக்கச் சொல்லி விட்டாராம் சஞ்சய்.

## ஹிந்திக்கு செல்லும் நதியா!



திருமணத்திற்கு பின், இளம் வயது அம்மாவாக, சண்டை மற்றும் எம். குமரன் சன் ஆப் மகா லட்சுமி போன்ற படங்களில் நடித்த நதியாவுக்கு, தொடர்ந்து நடிக்கும் ஆர்வம் மேலோங்கியுள்ளது. அதனால், "சமுதாயத்தில், 40 வயது பெண்களுக்கு எவ்வளவோ பிரச்னைகள் உள்ளன. அம்மாதிரி பிரச்சினைகளை மையமாக வைத்து படமெடுத்து, என்னை போன்ற முன்னாள் கதாநாயகிகளுக்கு வாய்ப்பு கொடுங்கள்..." என்று, தன் அபிமான இயக்குனர்களிடம் கேட்டு வருகிறார். அத்துடன், ஹிந்திப் படங்களில் நடிப்பதில் ஆர்வம் காட்டாமல் இருந்து வந்த நதியா, இந்தியில், நடுத்தர வயது நடிகைகளுக்கு நடிக்க, போதுமான வாய்ப்பு கிடைத்து வருவதால், தற்போது, சில இயக்குனர்களை அணுகி, வாய்ப்பு கேட்டு வருகிறார்.

## துபாய் பொண்ணு நிவேதா



'ஒருநாள் கூத்து' படத்தின் இன்னொரு நாயகி நிவேதா பெத்துராஜ். துபாய் வரவு. மிஸ் இந்தியா யுஏஇ. நல்லாத் தமிழ் தெரியும். மதுரை பழுங்கா நத்தம் பொண்ணு. துபாய் வாழ் இந்தியர்களுக்கு இடையில நடக்கிற அழகிப் போட்டி. இதுவும் மிஸ் இந்தியா மாதிரி அழகு, பொது அறிவு, நம்மை நாம் எப்படி வெளிப்படுத்துறோம், இப்படி பல கட்டத் தேர்வுகள் இருக்கு. அந்த டைட்டில் எனக்குக் கிடைச்சது சந்தோஷம். "பிடிச்ச ஹீரோ, விஜய். ஹீரொயின் நயன்தாரா, சிம்ரன். சிம்ரன் எனக்கு ரோல் மாடல் என்கிறார்.

## பிரபுதேவாவின் கனவு!



தமிழ் சினிமாவில் புகழ் பெற்று, பின், ஹிந்தியில் பிரபல இயக்குனராகி விட்ட பிரபுதேவாவுக்கு, அடுத்து, ஹொலிவுட்டில் படம் இயக்க வேண்டும் என்பது பெரிய கனவாக உள்ளது. அதுவும், ஹொலிவுட்டில் வெளியான, லார்ட் ஆப் தி ரிங்ஸ் படத்துக்கு இணையாக, மகாபாரத கதையை பிரமாண்டமாக இயக்க வேண்டும் என்று ஆசைப்படுகிறார். தற்போது, ஏ.எல்.விஜய் இயக்கத்தில், தேவி (எல்) என்ற படத்தில் தமிழ், தெலுங்கு மற்றும் இந்தி என, மூன்று மொழிகளில் நடித்து வருபவர், அதையடுத்து,ஹொலிவுட் பட முயற்சியில் இறங்கப் போவதாக கூறுகிறார்.






# பெண் பயணிகளுக்கு...

பஸ்ஸில் ஏறும்போது உங்கள் பின்னால் ஏறுபவர்களிடம் கவனத்துடன் இருங்கள்.

நெரிசலான நேரங்களில் பஸ்ஸில் செல்போன் உபயோகிப்பதை முடிந்தவரை தவிர்த்து விடுங்கள்.

பிரச்சினை ஏற்படும்போது குரலை உயர்த்திப் பேசுங் கள். ஒருபோதும், உங்களைப் பலவீனமானவராகக் காட்டிக் கொள்ளா தீர்கள்.

இரவுநேரப் பயணங்களில் மேக்அப்-ஐ குறையுங்கள்.

தொலைதூரத்துக்குப் பஸ் பயணம் என்றால், இரவு நேரப் பயணத்தை முடிந்தவரை தவிருங்கள்.

பிரச்சினை செய்பவர் மதுபோதையில் இருந்தால் எதிர்வினை ஆற்றமாட்டார்கள். எனவே, தைரியமாக அடித்துவிடுங்கள்.

பிரச்சினை வந்துவிட்டால், போலீஸ் ஸ்டேஷனுக்கு பஸ்ஸை விடுமாறு நடத்துநரிடம் சொல்லுங்கள். நடத்துநர் ஒத்துழைப்புத் தரவில்லை என்றால், உங்கள் மீது புகார் கொடுப்பேன் என்று அவரை எச்சரியுங்கள்.

பாலியல்சீண்டலுக்கு ஆளானால், தைரியமாக எதிர்த்துப் பேசுங்கள். முடிந்தால், பிரச்சினை செய்பவரின் கன்னத்தில் பளார் என்று அறைந்துவிடுங்கள்.

# ஸ்கூட்டர் பெண்ணே...

பைக்கை ஃ ஸ்கூட்டரை சென்டர் ஸ்டாண்ட் போட நிறையப் பேர் சிரமப்படுகிறீர்கள் என்பது என் கண்ணுக்கு கண்ணாடி மாதிரி அப்படியே தெரியுது. ஸ்டாண்டில் ஏறி நின்று முழு பலத்தையும் காட்டி ஸ்டாண்டுக்கு செலவு வைக்காதீர்கள். லேசாக அழுத்தம் கொடுத்தாலே போதும் ஸ்கூட்டர் அதுவாகவே பின் பக்கம் சென்று 'ஜம்முனு' உட்கார்ந்து கொள்ளும்.

'வெயிட்டான வண்டிகளை பார்க் பண்றது ரொம்பக் கஷ்டமா இருக்கு' என்று ஃபீல் பண்ணும் பெண்கள், பைக்கை ரிவர்ஸ் எடுக்கும்போது, இடுப்பால் தாங்கிப் பிடித்தால் எவ்வளவு எடை இருந்தாலும் தெரியாது. ஹேண்ட் பாரை மட்டும் பிடித்து நகர்த்தினால்தான், பலன்ஸ் கிடைக்காமல் கீழே விழுந்து அருகில் நிற்கும் வண்டிகள் சீட்டு கட்டு போல சரிந்து விழ வாய்ப்புண்டு.

எப்போதுமே சைட் மிரர் பார்க்காமல், இண்டிகேட்டர் போடாமல் திரும்பாதீர்கள்! திரும்பும் முன் சிக்னல் செய்வது மிக முக்கியம் பெண்களே. அதேபோல் சடர்ன் பிரேக் போடாதீர்கள். இது உங்களுக்கும் ஆபத்து பின்னால் வரும் அனைவருக்கும் பேராபத்து.

சாலையில் எப்போதுமே நடுவில் செல்ல வேண்டாம் இதனால் பெரிய வாகனங்களை ஓட்டி வருபவர்கள் செம கடுப்பாக வாய்ப்புள்ளது. எப்போதும் பெரியவங்களைப் பகைச்சுக்கக் கூடாது ஓ.கே...

ஸ்கூட்டர் கீழே விழுந்தால், ஏர்லாக் ஆகிவிடும், உடனே ஸ்டார்ட் ஆகாது. அதனால், பதறப்படாமல், ஐந்து நிமிடங்கள் ரிலாக்ஸ் செய்து, முடிந்தால் ஐஸ் கிறீம் சாப்பிட்டு விட்டு ஸ்டார்ட் செய்து பாருங்கள். ஆல் வில் வெல்!




சாலையில் செல்லும் போது மற்ற வாகனங்களை ஒட்டிய படி ஓவர் டேக் செய்யாதீர்கள். முக்கிய மாக இடதுபுறம் டோன்ட் டேக் ஓவர்டேக்! ஓவர்டேக் உடம்புக்கு ஆகாது...

சிக்னல் வருவதற்கு ரொம்ப தூரம் முன்னரே கால்கள் இரண்டையும் அகல விரித்துக் கொண்டே வராதீர்கள்! காமெடியாக இருக்கும் என்பதையும் தாண்டி, கால்களை பின்னால் வரும் வண் டிகள் இடித்துவிடவும் வாய்ப்புள்ளது.

புடவைத் தலைப்பு, சுடிதார் ஷோல் போன்றவற்றை மிகவும் கவனமாக ஓ ஸ்டைலில் கழுத் தில் கட்டி விடுங்கள். சூப்பர்மேன், பேட்மேன் போல் பறக்க விட்டுக் கொண்டு செல்லா தீர்கள்.

காதில் ஹெட் போன் மாட்டு வதைத் தவிர்த்து, முன்னால் செல்லும் இரண்டு அல்லது மூன்று வாகனங்களை மட்டும் கவனம் வைத்து ஓட்டுங்கள். விபத்துக்குவாய்ப்பேஇல்லை. வீட்டுக்குப்போய்க்கூட பாட்டுக் கேட்கலாம்...

ரொம்ப முக்கியம் - ஹெல்மெட். உங்கள் அழகிய முகத்துக்கு ஸ்டைலான ஹெல் மெட் அநாவசியம் வைஸர் கொண்ட ஃ புல்ஃபேஸ் ஹெல்மெட்தான் அவசியம் தோழிகளே!

# குழந்தைகளின் முன்னிலையில் செய்யக் கூடாதவை

எந்த குழந்தையும் நல்ல குழந்தை தான் மண்ணில் பிறக்கையிலே, அவர் நல்லவர் ஆவதும் தீயவர் ஆவதும் அன்னையின் வளர்ப்பினிலே என்ற வரிகள் உங்களுக்கு நினைவிருக்கலாம்.

ஆம், குழந்தையின் வளர்ப்பில் தாய் எவ்வளவு முக்கியமோ அதை விட குடும்ப சூழலும் மிக முக்கிய காரணமாக அமைகிறது.

குழந்தைகள் பெற்றோர்களை பார்த்து தான் ஒவ்வொரு விடயத்தையும் கற்றுக் கொள்கிறார்கள்.

**கணவன் – மனைவி சண்டை**

கணவன் - மனைவி இடையிலான சண்டை சச்சரவு குழந்தைகளுக்கு தெரியக்கூடாது. அவர்கள் முன்னிலையில் சண்டையிட்டு கொள்வதை கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். நீங்கள் தான் உங்க வீட்டு சுட்டிக்கு ஹீரோ என்பதை மறந்துவிட வேண்டாம், உங்களை பார்த்தே குழந்தைகள் வளர்கின்றது.

**விமர்சனம் வேண்டாம்**

குழந்தைகள் முன்னிலையில் மற்றவர்களை விமர்சிக்க வேண்டாம், உதாரணத்திற்கு உங்கள் நண்பரை அவன் சரி யான சோம்பேறி என பேசியிருந்தால் ஒருவேளை அவர் வரும் போது சோம்பேறி மாமா வந்துவிட்டார் என சொல்ல நேரிடலாம். குறிப்பாக குழந்தைகளுக்கு எதிர்மறையான



எண்ணங்கள் தோன்றும்.

**தீய சொற்கள்**

தீய சொற்கள் பயன்படுத்துவதை கண்டிப்பாக தவிர்த்து விடுங்கள், உங்களை பார்த்து தான் அவர்கள் பேச கற்றுக் கொள்கிறார்கள் என்பதை மறந்துவிட வேண்டாம். இதேபோல் குழந்தைகள் முன்னிலையில் சிகரெட் பிடிப்பது, மது அருந்துவது போன்ற கெட்ட பழக்க வழக்கங்களை செய்ய வேண்டாம்.

**மிரட்டல் வார்த்தைகள்**

சிறு குழந்தைகளை மிரட்டும் போது கொன்னுடு வேன், தலையை வெட்டிவிடு வேன் என்பது போன்ற வார்த்தைகளை பயன்படுத்த வேண்டாம்.

இதேபோல் தொலைக் காட்சியில் நல்ல விடயங்களை சொல்லிக் கொடுக் கும் புரோகிராம் களை பாருங்கள். எப்போதும் அழுது வடியும், அடா வடி சீரியல்கள் அறவே வேண் டாம்.

**ஒப்பிட்டு பேச வேண்டாம்**

ஒவ்வொரு குழந்தைக்கும் தனித்திறமை என்று இருக் கும், உங்கள் குழந்தையை மற்றவருடன் ஒப்பிட்டு ஒரு போதும் பேச வேண்டாம், அது அவர்களுக்கு தாழ்வு மனப்பான்மையை அதிகரித்து விடும்.

**கல்வி**

உங்கள் குழந்தைகள் நீங்கள் எதிர் பார்த்த மதிப்பெண்களை எடுக்கவில்லை என்றால் அதற்காக அவர்களை திட்ட வேண்டாம், அவர்களுடைய பிரச்சனைகளை கண்டறிந்து தீர்க்க வேண்டும்.



# என்னைக் கேளுங்கள்

*பழங்களை நீண்ட நாட்கள் பாவிப்பதற்கு ஏதாவது வழிகள் உண்டா?*

பழங்களை கடைகளில் வாங்கியவுடன் அவற்றை எலுமிச்சைச்சாறு கலந்த நீரில் போட்டு ஐந்து நிமிடங்களின் பின் பாவிக்கலாம். பழங்களின் மீது இரசாயனம் தெளிக்கப்பட்டிருந்தாலும் அவற்றின் வீரியத்தையும் இது குறைக்கும்.

*பிஸ்கட் வகைகள் சில நாட்களிலேயே நமத்துப் போகின்றதே ஏன்?*

பிஸ்கட் டப்பாவில் சிறிதளவு சீனியைத் து/வி அதன் மேல் பிஸ்கட் வகைகளை அடுக்கி வைத்தால் அதிக நாட்கள் கெடாமல் இருக்கும்.

*தேங்காய்ச் சட்னி கெட்டியாகிவிட்டால் தண்ணீர் கலந்தால் சட்னியின் சுவை கெடாதா?*

சட்னியில் தண்ணீர் கலப்பதற்கு பதிலாக தேங்காய்ப் பால் சேர்த்தால் சட்னியின் சுவை கெடாமல் இருக்கும்.

# 'தண்ணி முட்டான்'



சதாவேரி, நீலிசெடி, அம்மைக்கொடி என பல பெயர்களில் அழைக்கப்படும் தண்ணீர் முட்டான் கிழங்கு பல மருத்துவ குணங்களை உள்ளடக்கிய ஒரு மெல்லிய ஆனால் கெட்டியான தண்டுடைய பல பருவச்செடி.

பலவிதமான சிறுநீரக கோளாறுகள், மஞ்சள் காமாலை மற்றும் தொடை நரம்பு வலி போக்கவும், சிறுநீர்ப்போக்கினைச் சீர்படுத்தவும் உதவுகிறது.

இது சிறுநீர் போக்கினை தூண்டி மூட்டுக்களில் சேரும் கழிவுப் பொருட்களை சிறுநீர் மூலம் வெளியேற்றி கீழ் வாதத்தினைத் தீர்க்கும்.

இதற்கு இதிலுள்ள செயல் திறன் மிக்க வேதிபொருட்கள் ஆன ஸ்டிராய்டல், ஃ பிளேவனாய்டுகள், குளுக்கோசைட்டுகளான அஸ்பரகோசைடு கள், கசப்பு குளுக் கோசைடுகள் போன்றவையே காரணம்.

சிறுநீரக நோய்களை குணப்படுத்துவது மட்டுமல்லாமல் நரம்பு மண்டல நோய்களையும், மலட்டு தன்மையையும் குணப் படுத்தும் ஆற்றல் வாய்ந்தது.

மூட்டுவலி, கழுத்து சுளுக்கு, நரம்பு மண்டல நோய்களை நீக்க உதவும் தைலங்களில் இது அதிகளவில் பயன் படுத்தப்படுகிறது.

பால்வினை நோயான கோனேரியாவுக்கு மருந்தாக பாலுடன் கலந்து தரப் படும் இத்தாவரம் பெண்களின் மலட் டுத்தன்மையை நீக்குவதில் முக்கிய பங் காற்றி பெண்குறி கோளாறுகளைப் போக் கிடவும் உதவுகிறது.

## போட்டிச் சிறுகதை 8



பெயர் : கந்தசாமி கௌசிகன்
முகவரி : பாடசாலை வீதி,
களுவாஞ்சிக்குடி, மட்.
சிறுகதை : திறமைக்கே முதலிடம்.!

அன்று புதன் கிழமை தரம் பத்திற்கான வகுப்பாசிரியர் இடமாற்றம் சென்றதால் அவ்விடத்திற்கு புதிதாய் ஓர் ஆசிரியர் இன்று நியமிக்கப்படுகிறார். காலை ஒன்று கூடல் முடிவடைந்து மாணவர்கள் வகுப்பறைக்கு வந்துவிட்டனர். அதிபர் புதிய ஆசிரியரை அழைத்து வந்து அறிமுகப்படுத்திவிட்டு சென்றுவிட்டார். அவர் மாணவர்களை அறிமுகப்படுத்தும் படி கூற ஒவ்வொருவராய் தம் பெயர் கூறியும், இடமும் கூறி அமர்ந்தனர். அதில் செல்வி பாட்டும், கமல் பேச்சும், கங்கா நடனமும் ஆடி தம் திறமைகளை வெளிப்படுத்தினார்.

நந்தகுமார் ஆசிரியர் கமலை அழைத்து பேச்சுப்போட்டிக்கான தலைப்பை ஆராய்ந்து அதில்சேர்க்கக்கூடிய பல முக்கிய விடயங்களை சேர்த்து பின்னர் அதனை கமலினது பேச்சுப் பாணியில் தங்குதடையின்றி வருமாறு பயிற்றுவிக்கிறாள். கமலினது பேச்சாற்றல் கண்டு மிகவும் மெச்சி அவனுக்கு மனமார்ந்த வாழ்த்துகள் தெரிவித்து போட்டியில் வெற்றி பெற வாழ்த்துகின்றார்.மறு நாள் நற்சிந்தனை கூறும் ஒழுங்கில் குறித்த மாணவர் சமுகாளிக்காத காரணத்தினால் நேற்றைய தினம் தன்னை கவர்ந்த, பேச்சாற்றலை வெளிப்படுத்திய கமலை அழைத்து பேச வைக்கிறார், புது ஆசிரியர் நந்தகுமார். அன்றைய தினம் வருடாந்த ஆண்டு நிறைவு விழாவையொட்டி பல கலை நிகழ்வுகள் நடாத்துவதற்கு மாணவர்களிடம் பங்குபற்றும் மாணவர்களின் பெயர்ப்பட்டியல் சேகரிக்க ஒவ்வொரு வகுப்பறைக்கும் மாணவ தலைவர்கள் சென்று சேகரித்தனர்.

தரம் பத்து வகுப்பறையில் வந்ததும், பாடல், நடனம், பேச்சு, கவிதை என பல போட்டிகளுக்கான தலைப்பில் பெயர் எழுதப் பட்டது. கமல் தனது பெயரை பேச்சுப் போட்டியில் இணைத்துக் கொண்டான்.


கலை நிகழ்வு வாரம் தொடங்கியது. போட்டிகள் நடக்கும் நாட்கள் அறிவிக்கப் பட்டன. அத்தோடு பல போட்டிகள் நடைபெற்று பெறுபேறுகளும் வெளியிடப்பட்டன. பேச்சு போட்டிக்கான நாள் நாளை என்றதும் அதற்கு முதல் நாள் போட்டியாளர்களின் பெயர் விபரப்பட்டியல் பாடசாலை ஒன்று கூடலில் வாசிக்கப்பட்டது. போட்டியாளர்கள் மட்டுப்படுத்தப்பட்டே போட்டிகள் நடந்தன. தேசிய பாடசாலையாகவும் விளங்குவதால் வாசிக்கப்பட்ட பெயர்ப் பட்டியலில் கமலின் பெயர் வாசிக்கப்படவில்லை.

தனது பெயர் போட்டியின் பெயர் பட்டியலில் இல்லாதது கமலை மிகவும் கவலை அடையச் செய்தது. கமல் சென்று தனது வகுப் பாசிரியரிடம் கூற, தான் கேட்டு சொல்வதாக கூறினார். போட்டியாளர்கள் என்பதால் அப் பிரபல பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரிய, ஆசிரியைகளின் பிள்ளைகள் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.ஆசிரியர் நந்தகுமார் அதிபரிடம் பணிவாக வேண்டு கோள் விடுத்து பேச்சுப்போட்டியில் எவ்வாறோ கமலின் பெயரை இணைத்துவிட்டார். மகிழ்ச்சியில் கமல் தனது ஆசிரியருக்கு நன்றி கூறினான்.

மறுநாள் போட்டிகள் ஆரம்பமாகின, விறுவிறுப்பாய் போட்டிகள் நடந்தேறின. கமல் தான் பங்கிற்கு நன்றாகவே பேச்சுப்போட்டியில் தன் திறமையை வெளிகாட்டியிருந்தான். இரண்டு போட்டிகளின் முடிவு வர காலதாமதமாகின. கலை நிகழ்வு போட்டிகள் வேறு சிலவும் நடந்து கொண்டிருந்தது.

கமல் தான் நன்றாக பேசியிருந்தான் என்றும், அவன் முதலாமிடம் வர கூடிய வாய்ப்புகள் அதிகம் இருப்பதாய் சில செய்திகள் கசிந்தன. ஆசிரியரதும் கமலினதும் முகம் மிகவும் மகிழ்ச்சியை வெளிப்படுத்தியது.போட்டியின் பெறுபேறுகள் அறிவித்தல் பலகையில் ஒட்டியிருப்பதாய் கேட்டதும் சென்று பார்க்கின்றார்கள். கமல் ஐந்தாம் ஆம் இடத்தைப் பெற்றிருந்தான். மற்றைய நால்வரும் கமலை விட பேச்சுப் போட்டியில் நன்றாக பேசவில்லை. இடையில் விட்டும்,தடுமாறியும் பேசி இருந்தனர். கமலின் முகம் மிகவும் சோர்ந்து போய்விட்டது. மேலும் அவர்கள் நால்வரும் அப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரிகளது பிள்ளைகள் என்றதும் கமலிற்கும் நந்தகுமார் ஆசிரியருக்கும் விளங்கிவிட்டது. அவர்கள் மேலும் கேட்டு பிரச்சினையை வளர்க்க விரும்பாமல் அதனை கைவிட்டனர்.

பரிசளிப்பு விழாவிற்கான ஆயத் தங்கள் சிறப்பாக நடைபெற்றுக்




கொண்டிருந்தது.

அன்றைய தினத்தில் கலைப் போட்டிகளில் பங்கு பற்றி முதலாவது வெற்றி பெற்ற வெற் றியாளர்கள் தமது திறமையை மேடையில் ஒப்புவித்தல் கட்டாயமானது. அந்த வகையில் பல நிகழ்வுகள் ஒத்திகை பார்க்கப்பட்டுக் கொண்டிருந்தன. பேச்சுப் போட்டிக்கான ஒத்திகை நிகழ்வில் முதலாவது இடம் பெற்ற மாணவன், பதட்டத்துடனும், சொற் களில் தடுமாற்றத்துடனும் பேசிக் கொண் டிருந்தான். ஒத்திகை பார்க்கும் இடத்தில் பேச்சுப்போட்டியில் 'சரியான தெரிவு தான் நடந்திருக்கின்றது" என்று பலரால் கேலி செய்யப்பட்டது. அவனது பயமும், பதட்டமும் அதிகமாக அவனால் ஒழுங்காக பேச முடியவில்லை. அவனது அம்மா அப் பாடசாலையில் ஆசிரியை என்பதால் அதிபருடன் கதைத்து இரண்டாவது இடத்தை பெற்ற பிள்ளையை பேச ஆயத்தம் செய்கின்றனர்.

பரிசளிப்பு விழா அன்று பல வேலைகள் மும்முரமாக நடந்துகொண்டிருந்தது. பரிசளிப்பு வைபவ நிகழ்வின் நிகழ்ச்சி நிரலுக்கேற்ப நிகழ்ச்சிகள் சரிபார்க்கப்பட்டன. காரணம் பிரபல பாடசாலைகள், வருகை தருவோர் பிரபல பிரமுகர்கள் என்பதால் பேச்சுப்போட்டி மேற்பிரிவிற்கான நிகழ்ச்சி செய்யவிருக்கும் மாணவரை கேட்ட போது வரவில்லை, பின் உரிய ஆசிரியரை அணுகி கேட்டனர், மாணவர் தலைவர்கள், ஆயத்தம் செய்யப்பட்ட பிள்ளையின் உறவினர் ஒருவர் இறந்தமையினால் அப்பிள்ளையினால் சமூகம் கொடுக்க முடியாது என கூறப்பட்டது. குறிப்பிட்ட ஆசிரியர் இதனைப் பற்றிக் கூறியதும் அதிபரும் ஆசிரியரும் குழம்பி விடுகின்றனர். யாரை பேசவைப்பது என்கின்ற குழப்பம்.

' மிஸ் சீவ் ஹெஸ்ற் எல்லாம் பெரிய இடம். ஏதாவது பண்ணுங்க...." என அதிபர்கூறிவிட்டு பரிசளிப்பு விழா மண்டபத்திற்குள் சென்று விட, அவ் ஆசிரியை பெருங்குழப்பத்திற்கு ஆளாகின்றார். நிகழ்ச்சி நிரலில் இருந்து நீக்குவதென்றாலும் நேரப்பிரச்சினை, மற்றையது மானப் பிரச்சினை என்ன செய்வதென்றே தெரியாத நிலையில் தடுமாறிக் கொண்டிருந்தார். இக் குறிப்பிட்ட ஆசிரியையே தனது சக ஆசிரியையின் தூண்டுதலினால் தெரிவுகள் இடம்பெற்றது. தங்களது நிலையை நினைத்து அவரே நொந்து கொள்கிறார்.

'பரிசளிப்பு விழா தொடங்க இன்னும் சில நிமிடங்களே......" என அறிவிக்க அந்த ஆசிரியர் மண்டபத்தை விட்டு வெளியேறிவிட்டார். நிகழ்வுகள் தொடங்கிவிட்டன. மங்கள விளக்கு, அதிதி உரை என தொடர்ந்த வண்ணம் இருக்கிறது. அடுத்த நிகழ்வு பேச்சு என்றதும் மண்டபத்தில் இருந்த அதிபருக்கு குழப்பமாய் இருந்தது. குறிப்பிட்ட நேரம் வந்ததும் நிகழ்வுகள் அறிவிக்கப்பட்டது. ஓரிரு நிமிடம் யாரும் வரவில்லை. மண்டபமே அந்த நிகழ்ச்சியாளரை ஆவலாய் எதிர்பார்த்தது. அதிபர் தலை குனிந்து இருந்தார்.

'அனைவருக்கும் வணக்கம் ....." என கூறிய படி பேச்சு ஆரம்பிக்கப்பட்டது. அதிபரும் மகிழ்ச்சியாக தலை நிமிர்ந்தார். ஆசிரியை பேச்சிற்கு ஏற்பாடு செய்துவிட்டார் என்று, பேச்சின் ஒலி கேட்ட வேறிடம் நின்ற ஆசிரியை மண்டபத்திற்கு விரைகின்றார். அங்கே தரம் பத்தில் கல்வி கற்கும் கமல் என்ற மாணவன் மிகவும் திறமையாகவும் நேர்த்தியாகவும் பதட்டம் ஏதுமில்லாமல் பேசிக்கொண்டிருந்தான். பேச்சுப்போட்டியில் முதலாவது இடம் இவனுக்கே வந்திருக்க வேண்டும் அங்கு நடந்த குழறுபடியே அனைத்திற்கும் காரணம். ஆசிரியையின் கண்களில் கண்ணீர் எட்டிப்பார்த்தது. தனது தலை கவிழாமல் காத்து விட்டான் என்ற காரணம் தான்.

பதினைந்து நிமிடங்கள் அம் மாணவன் கமல் பேசி முடிந்ததும், அவனது பேச்சிற்கு மண்டபமே அதிரும் படி கைதட்டல்கள் கிடைத்தது, வகுப்பாசிரியர் நந்தகுமார் பெருமையுடன் பார்த்தார். ' நன்றாக பேசுகிறான்" என மண்டபத்திலே பேச்சுகள் நிலவியது.

கமல் மேடை இறங்கியதும் ஆசிரியர் சென்று அவனுக்கு நன்றி கூற அவன் நன்றிப் பெருக்குடன் தன் நண்பனையும், நந்தகுமார் ஆசிரியரையும் பார்க்கிறான்.

சிறிது நேரத்திற்கு முன்பு தனது நண்பன் சுரேஸ்ும், கமலின் மனம் கவலையுற்றதால் போட்டியில் தான் பங்குபற்றி சிறந்த இடம் ஒன்றினைப் பெறாமையால் அந் நிகழ்வைப் பார்க்காமல் வீடு செல்வதற்கு அம் மண்டபத்தை விட்டு வெளியேறுகின்றனர். அவர்கள் அதிபரது காரியாலயத்தை தாண்டுவதற்கு முதல் அதிபரும், பேச்சுப் போட்டிக்கு பொறுப்பான ஆசிரியரும் பேசுவதை கேட்கின்றனர். தமது பாடசாலை தலைகுனிவு ஏற்படக்கூடாது என நண்பனின் வற்புறுத்தலுக்கு தனது திறமைக்கான ஒரு வாய்ப்பு கிடைத்திருக்கின்றது என்றும் எண்ணி மீண்டும் மண்டபத்திற்கு சென்று, நந்தகுமார் ஆசிரியரிடம் இதைப் பற்றிக் கூற 'மிக்க நல்லது. சரியான சந்தர்பம் தவறுகள் திருத்தக் கூடிய ஒரு சூழ்நிலை கொண்ட சந்தர்ப்பம். இந்த சந்தர்பத்தை தவற விடாதே" என ஆலோசனை கூறினார். அதன் விளைவே திடீரென கமல் நிகழ்வில் தோன்றி பேசுவதற்கான தாற்பரியம் ஆகும்.

அதிபரும் வந்து கமலுக்கு கைகொடுத்து வாழ்த்துகளை தெரிவித்தார். பின் போட்டியில் நடந்த குழறுபடியால் ஏற்பட்ட சங்கட நிலை இனி தோன்றக்கூடாது என எண்ணி, அதிபர் பேச்சுப்போட்டிக்கான ஆசிரியரை அழைத்து 'எந்த போட்டியிலும் அந்தஸ்து அதிகாரம் என்பன இனி பார்க்க கூடாது என்றும், இனிவரும் காலங்களில் திறமைக்கே முதலிடம் கொடுக்க வேண்டும்" என்றும் அறிவுரை கூறினார்.

அடுத்த ஆண்டு பாடசாலை ஆண்டு நிறைவையொட்டி போட்டிகள் இடம்பெற்றன. பேச்சு,கவிதை பாடல், ஆடல் என போட்டிகள் பல இடம் பெற்றன. கமல் பேச்சுப் போட்டியில் பங்குபற்றி முதலிடம் பெற்றுக்கொண்டான்.

இச்சிறுகதை பரிசுக்குரியதென நீங்கள் சிபார்சு செய்ய விரும்பினால், இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் கூப்பனை நிரப்பி எமக்கு அனுப்பி வைக்கவும்.

## சிறுகதைப் போட்டிக்கான கூப்பன் - 8

தெரிவு செய்யப்படும் சிறுகதைத் தலைப்பு : ..............................................
..............................................
சிறுகதையின் இலக்கம் : ..............................................
எழுதியவர் பெயர் : ..............................................
சிபார்சு செய்பவர் பெயர் : ..............................................
முகவரி : ..............................................
..............................................
தொலைபேசி இலக்கம் : ..............................................
.............................................. ஆகிய நான்
இச் சிறு கதையை வெற்றிக்கு சிபார்சு செய்கிறேன்.

..............................
ஒப்பம்

கூப்பனை அனுப்ப வேண்டிய முகவரி

**தினச்செய்தி சிறுகதைப் போட்டி**
**தில்லைக்கட்டி வீதி,**
**சுன்னாகம்.**

# சிங்கம் சூர்யா



எந்தவொரு திரையுலக முன்னனுபவமும் இல்லாமல், தமிழ்த் திரையுலகில் காலடி எடுத்து வைத்து, ஒரு சிறந்த நடிகருக்கு தேவையான அனைத்து திறமைகளையும் குறுகிய காலத்திலேயே வளர்த்து கொண்டு, இன்றைய முன்னணி நடிகர்களுள் ஒருவராகத் திகழ்பவர், நடிகர் சூர்யா.

தென்னிந்தியாவில் உள்ள தமிழ்நாட்டின் தலைநகரமான சென்னையில் நடிகர் சிவக்குமாருக்கும், லக்ஷ்மிக்கும் மகனாக ஜூலை மாதம் 23 ஆம் தேதி, 1975 ஆம் ஆண்டில் பிறந்தார். இவருக்கு கார்த்தி என்று ஒரு சகோதரனும், பிருந்தா என்ற சகோதரியும் உள்ளனர்.

அவரது சகோதரரான கார்த்தியும் தமிழ்த் திரையுலகின் முன்னணி நடிகரென்பது குறிப்பிடத்தக்கது.

தன்னுடைய பள்ளிக் கல்வியை சென்னையில் பத்மா சேஷாத்ரி பால பவன் பள்ளியிலும், செயின்ட் பீட்ஸ்ஆங்கிலோ இந்திய மேல்நிலைப் பள்ளியிலும் கற்றார். பின்னர், சென்னையில் உள்ள லயோலா கல்லூரியில்வணிகவியலில் இளங்கலைப் பட்டம் பெற்றார். இன்றைய திரையுலகப் பிரபலங்களான விஜய், விஷ்ணுவர்தன், யுவன் ஷங்கர் ராஜா, கார்த்திக் ராஜா போன்றோர் அவரது கல்லூரி நண்பர்களாக இருந்தனர்.

நடிகரென்ற பெருமையோ, மமதையோ சிறிதளவும் இல்லாத சிவகுமார் தனது பிள்ளைகளையும் அவ்வாறே வளர்த்தார் என்பதற்கு சூர்யா ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. வணிகவியலில் இளங்கலைப் பட்டம்பெற்ற அவர், ஆடைதயாரிப்புத் தொழிற்துறை மீது மிகுந்த ஆர்வமுடையவராகக் காணப்பட்டதால், ஒரு முன்னணி நடிகரின் மகனென்ற அங்கீகாரத்தை வெளிக்காட்டாமல், ஒரு தொழிற்சாலையில் மாதம் எட்டாயிரம் ரூபாய் சம்பளத்திற்கு சேர்ந்தார். ஆறு மாதங்கள் அங்கு பணி யாற்றிய அவரை, இயக்குனர் வசந்த், அவரின் அடுத்தப் படத்திற்கு ஒப்பந்தம் செய்யவே, அவ்வேலையில் இருந்து விலகிக் கொண்டார்.

மணிரத்னம் தயாரிக்க வசந்தின் இயக்கத்தில் உருவான 'நேருக்கு நேர்' திரைப்படம் மூலமாக சூர்யா அறிமுகமானார். 1997 இல் வெளியான இப்படத்தில், நடிகர் விஜயுடன் இணைந்து நடித்திருப்பார். அதன் பின்னர், 'காதலே நிம்மதி' (1998), 'சந்திப்போமா' (1999), 'பெரியண்ணா' (1999), 'பூவெல்லாம் கேட்டுப்பார்' (1999), 'உயிரிலே கலந்தது' (2000) போன்ற படங்களில் நடித்த அவருக்கு, 2001 ஆம் ஆண்டில் வெளிவந்த 'ஃப்ரெண்ட்ஸ்' திரைப்படம் ஒரு திருப்புமுனையாக அமைந்தது எனலாம்.

அவ்வெற்றியைத் தொடர்ந்து, அதே ஆண்டில் வெளியான 'நந்தா' படமும் வெற்றிபெற்று, தமிழ்நாடு மாநில அரசின் விருதைப் பெற்றுத் தந்து, அவரை முன்னணி நட்சத்திரம் என்ற அந்தஸ்திற்கு உயர்த்தியது.

கௌதம் மேனனின் அடுத்தப் படைப்பான 'வாரணம் ஆயிரம்' திரைப்படத்திற்காக, தவிர உடற்பயிற்சி மூலமாகத் தனது எடையைக் குறைத்து, 'சிக்ஸ் பேக்ஸ்' என்ற உடலமைப்பைத் தமிழ் திரையுலகில் வளர்ந்து வரும் ஹீரோக்களுக்கு அறிமுகப்படுத்தினார். மேலும் அவர், 'மன்மதன் அம்பு' (2010), 'கோ' (2011), 'அவன் இவன்' (2011) போன்ற படங்களில் கௌரவத் தோற்றத்திலும் நடித்திருக்கிறார்.

'பூவெல்லாம் கேட்டுப்பார்', 'உயிரிலே கலந்தது', 'காக்க காக்க', 'பேரழகன்', 'மாயாவி', 'ஜூன் ஆர்' மற்றும் 'சில்லுனு ஒரு காதல்' போன்ற படங்களில் நடிகை ஜோதிகாவுடன் இணைந்து நடித்த போது, அவர்கள் இருவருக்குள்ளும் காதல் மலர்ந்ததால், பல ஆண்டுகளாக அவர்கள் பெற்றோரின் சம்மதத்திற்காகக் காத்திருந்தனர். கடைசியில் அவர்கள் பச்சைக் கொடிகாட்ட, அவர்கள் இருவரும் செப்டெம்பர் மாதம் 11 ஆம்தேதி, 2006 ஆம் ஆண்டில் திருமண பந்தத்தில் இணைந்தனர். அவர்கள் இருவருக்கும் 2007இல் தியா என்ற மகளும், 2010 இல் தேவ் என்ற மகனும் பிறந்தனர்.

அவர்கள் 'அகரம் ஃபவுண்டேஷன்' என்ற பெயரில் தொண்டு நிறுவனம் ஒன்றை நிறுவி, பொது நலனுக்காகவும், பாதியிலே பள்ளிப்படிப்பை விட்ட ஏழைக் குழந்தைகளின் கல்விக்காகவும் தன்னலமற்ற தொண்டாற்றி வருகிறார். மேலும், புலிகளைக் காக்கப் பிரச்சாரம் மேற்கொண்ட அவர், காசநோயாளிகளுக்கு இலவச சிகிச்சையும் வழங்கி வருகிறார். இலாப நோக்கமற்ற அவரது தொண்டு நிறுவனத்தால், இதுவரை நூற்றுக்கணக்கான ஏழைக் குழந்தைகள் கல்விச் செல்வம் பெற்று, பயனடைந்து வருகின்றனர்.

மூன்று முறை 'தமிழ்நாடு மாநிலத் திரைப்பட விருது', மூன்று முறை 'ஃபிலிம் ஃபேர் விருது', நான்கு முறை 'விஜய்விருது' எனப் பல்வேறு விருதுகளை வென்றுள்ள அவர், ஒரே படத்திலேயே மாறுபட்ட வேடங்களை ஏற்று நடித்து சாதனை படைத்துள்ளார்.

ஜனவரி மாதம் 2012 ஆம் ஆண்டில், ஸ்டார் விஜய் தொலைக்காட்சியில் தொடங்கப்பட்ட கேம் ஷோவான 'நீங்களும் வெல்லலாம் ஒரு கோடி' நிகழ்ச்சியின் தொகுப்பாளராக அறிவிக்கப்பட்டார். அதன்படி, பிப்ரவரி 27ஆம் தேதி, 2012 ஆம் ஆண்டில் தொடங்கிய அதில், ஜூலை மாதம் 12 ஆம் தேதி வரை, அவர் அதைத் தொகுத்து வழங்கினார்.

அவர், டிவிஎஸ் மோட்டார்ஸ், ஏர்செல், சன்ஃபீஸ்ட், சரவணா ஸ்டோர்ஸ், பாரதி சிமெண்ட்ஸ், இமாமி நவரத்னா, நெஸ்கஃபே, ஜண்டு பாம், க்ளோஸ்-அப் டூத்பேஸ்ட், மலபார் கோல்ட் போன்றவற்றின் விளம்பரத் தூதராக இருந்து வருகிறார்.

இவரது அற்புதமான நடிப்புத் திறன் ரசிகர் நெஞ்சங்களில் நீங்கா இடம்பெறும்.

# சிறுகதை மன்னன் ஜெயகாந்தன்

ஜெயகாந்தன் மிகுந்த ஆற்றலும், ஆளுமையும், வேகமும், உயர்வும், தனித்துவமும் கொண்ட தலைச்சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர். அவர் ஓரளவே படித்திருந்தாலும், தமிழ் இலக்கியத்தைக் கரைத்துக் குடித்து, தமிழ் ரசிகர்களின் நெஞ்சங்களைத் தன் எழுத்துக்களால் கொள்ளை கொண்டவர். ஒரு எழுத்தாளராக மட்டுமல்லாமல், கட்டுரையாளர், பத்திரிகையாளர், துண்டு வெளியீடுகளை எழுதுபவர், திரைப்படத் தயாரிப்பாளர் மற்றும் விமர்சகர் எனப் பல்வேறு முகங்கள் கொண்டு, தமிழ் இலக்கியத்திற்கு அரும் தொண்டாற்றியவர் ஜெயகாந்தன் என்று சொன்னால் அது மிகையாகாது. இலக்கியத்திற்காக இந்திய அரசு வழங்கும் மிக உயர்ந்த விருதான 'ஞான பீட விருதைப்' பெற்ற இரண்டாவது தமிழ் எழுத்தாளர் என்ற பெருமைக்குரியவர். மேலும், இந்திய அரசின் மிக உயரிய விருதான 'பத்ம பூஷன் விருதை' தமிழ் இலக்கியத்திற்காக முதல்முறை பெற்றார். 'சாஹித்ய அகடமி விருது', 'ரஷ்ய விருது' என்று பல்வேறு விருதுகளைப் பெற்றவர்.

ஜெயகாந்தன் அவர்கள், தென்னிந்தியாவில் உள்ள தமிழ்நாட்டில் இருக்கும் கடலூரில் ஏப்ரல் மாதம் 24 ஆம் தேதி, 1934 ஆம் ஆண்டில் ஒரு வேளாண் குடும்பத்தில் பிறந்தார்.

ஜெயகாந்தன் அவர்களுக்கு, சிறு வயதிலிருந்தே பள்ளிப்படிப்பில் நாட்டமில்லாமல் இருந்தது. எனவே, அவர் ஐந்தாம் வகுப்புவரையே பள்ளிக்குச் சென்றார். இதன் காரணமாக, அவருக்கும், அவரது தந்தைக்கும் கருத்து வேறுபாடு ஏற்பட்டதால், அவர்தனது தாயார் மற்றும் தாத்தாவிடம் மிகவும் நெருக்கமாக இருந்தார். அவர் தனது 12 ஆவது வயதில் வீட்டை விட்டு ஓடி, விழுப்புரத்தில் உள்ள அவரது மாமா வின் வீட்டிற்கு வந்து சேர்ந்தார். அங்கு, அவரது மாமா அவருக்கு கம்யூனிச கொள்கைகளையும், சுப்ரமணிய பாரதி படைப்புகளையும் அறிமுகப்படுத்தி வைத்தார்.

சிறிது காலம் கழித்து, ஜெயகாந்தன் அவர்களுடைய தாயார் அவரை சென்னையில் உள்ள இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் உறுப்பினரான அவரது உறவினர் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி அலுவலகத்தில் தனது பிள்ளைப் பருவத்தைக் கழித்த அவர், தமிழ்நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களுக்குப் பரிச்சயமானார். அக்கட்சி அலுவலகத்தைத் தனது வீடாகவும், அக்கட்சி உறுப்பினர்களைத் தனது குடும்ப அங்கத்தினர்களாகவும் கருதிய அவர், அவர்களின் கலந்துரையாடல்களைக் கேட்க கேட்க, இலக்கியத்தின் மீது அவருக்கு நாட்டம் ஏற்பட்டது. இதனால், கட்சியின் அங்கத்தினரான ஜீவானந்தம் என்பவர், அவருக்குத் தமிழாசிரியர் ஒருவரை அவருக்குக் கல்வி கற்றுத் தருமாறு பணியில் அமர்த்தினார். தமிழ் இலக்கிய, இலக்கணங்களை முறையாகக் கற்றுத் தேர்ந்த அவர், பல இடங்களில் முழுநேரம் மற்றும் பகுதிநேர வேலைகளில் வேலை பார்த்தார்.



அவரது இலக்கிய வாழ்க்கையை 1950 களில் தொடங்கினார். பல்வேறு தினசரி மற்றும் மாத நாளிதழ்களான சரஸ்வதி, தாமரை, கிராம ஊழியன், ஆனந்த விகடன் போன்றவற்றில் அவரது படைப்புகள் வெளியாயின. எழுத்துலகில் கொடிக்கட்டிப் பறந்த அவர், தமிழ்த் திரையுலகிலும் வலம் வந்தார். அவரது மிகவும் வெற்றிப்பெற்ற படைப்புகளான "உன்னைப் போல் ஒருவன்" மற்றும் "சில நேரங்களில் சில மனிதர்கள்" போன்ற நாவல்கள் படமாக்கப்பட்டன. "உன்னைப்போல் ஒருவன்" என்ற படம், சிறந்த மாநில மொழித் திரைப்படத்திற்கான 'குடியரசுத் தலைவர் விருதில் மூன்றாம் விருதான பத்ம பூஷன் விருதை' பெற்றது.

அவர் திரைப்படங்களை இயக்கியும் உள்ளார். 'உன்னைப் போல் ஒருவன்', 'யாருக்காக அழுதான்', மற்றும் 'புதுச்செருப்பு கடிக்கும்' போன்றவற்றைக் குறிப்பிட்டுக் கூற முடியும்.

# மலையக வீடமைப்புத் திட்டம் நிறைவேறுவது எப்போது

(பெருமாள் - மஸ்கெலியா நிருபர்)

இலங்கையின் சமகால நிலைப்பாடு ஜெனிவா தீர்மானம் என்ற அரசியலை கொண்டு நடக்கிறது. இன முரண்பாடு தமிழர் விடுதலை போராட்டம் 2009 ஆம் ஆண்டு முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. இந்த போராட்டத்தின் வடிவம் இன முரண்பாட்டுக்கு எதிரானதாகும்.

1987 ஆம் ஆண்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர 13 ஆவது சீர்த்திருத்தச்சட்டம் இந்தியா இலங்கைக்கு சிபார்சு செய்தது. இதுவே மாகாண ஆட்சி முறை எனப்பட்டது. ஆனால் முடிவுக்கு கொண்டு வர முடியவில்லை. மீண்டும் 2002 ஆம் ஆண்டு யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வரப்பட்டது என்று தேசிய சர்வ மத நல்லிணக்க சமூக அமைப்பினால் நடத்தப்பட்ட கருத்தரங்கினால் ஓய்வு பெற்ற பேராசிரியர் எம். எஸ். மூக்கையா பிரதம அதிதியாக கலந்து கொண்டு பேசும் போது தெரிவித்தார். இக் கருத்தரங்கு ஹட்டன் தபால் அலுவலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

தொடர்ந்து பேராசிரியர் மூக்கையா கூறிய போது,

அணுகுமுறையில் வெவ்வேறு வழிகளை மேற்கொண்டு இலங்கை அரசு மனித உரிமை சர்வதேச நாடுகளுக்கு கவனம் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டது. சுனாமி அழிவு, பெருவெள்ள அழிவின் போது வெளிநாடுகளும் மனிதாபிமானத்துடன் உதவ முன் வந்தனர். இலங்கை மட்டுமல்ல 40 நாடுகள் இயற்கை அழிவுக்கு முகங்கொடுத்தன. தாமாகவே முன் வந்து உதவிகளை செய்தமை குறிப்பிடத்தக்கது.

இறுதியாக 1945 ஆம் ஆண்டு 2 ஆவது உலக மகா யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வந்தனர். இனிமேல் உலகில் யுத்தம் ஏற்படக் கூடாது என்றும் பின் தங்கிய நாடுகளுக்கு உதவ வேண்டும் என்ற எண்ணமும் நிலைப்பாடும் ஏற்பட்டது. ஐக்கிய நாட்டு சபை 1987 ஆம் ஆண்டு மறுபடியும் அழிவு ஏற்படுவதற்காக 1989 ஆம் ஆண்டு சமய மொழி இன முரண்பாட்டை தவிர்ப்பதற்கு ஐக்கிய நாடுகள் சபை மும்முரமாக உலக நாடுகளின் கவனத்திற்கு வழி யுறுத்தினர். அதனோடு இதற்கான தீர்வை கொண்டு வருவதன் மூலமே பாதிக்கப்பட்ட நாடுகளின் பிரச்சினையை முன் கொண்டு வந்தனர். துன்பப்படும் போது அந்த மக்களுக்கு உதவுவதே மேலான நோக்கமாக ஐக்கிய நாடுகள் சபை எப்போதும் கவனமாக இருந்தது. யுத்தம் செய்வதை தவிர்ப்பதற்காக உறுதி மொழிகளை அந்நாட்டினர் தீர்வாக கொள்ள வேண்டிய அவசியத்தை வழியுறுத்தினர்.

நிரந்தர சமாதானத்தை ஏற்படுத்துவதும் தமது தலை யாய கடமையாக கொண்டு செயற்படுமாறு 2 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஐக்கிய நாடுகள் சபை ஒன்று கூடி ஜெனிவா தீர்மானத்தை வலியுறுத்தி வந்தனர். வெளிநாட்டிலுள்ள புலம் பெயர்ந்த தமிழர்களின் வற்புறுத்தலையும் மேற்கோள் காட்டி இந்தியா ஜப்பான் பெருந்தொகை பணத்தை வழங்கியும் வந்தன. இந்த நிலையில் இந்தியா 50,000 வீடுகளை கட்டி கொடுக்கவும் முன்வந்தது. ஆனால் இதற்கான தீர்மானங்களை இலங்கை எங்கே எப்படி தீர்மானிப்பதுடன் அதற்கான காணி போன்ற பல்வேறு விடயங்களை தெளிவு படுத்தியிருக்க வேண்டும்.

6000 ஏக்கர் நிலத்தை இராணுவம் ஆக்கிரமித்துக் கொண்டது. இதனை ஜெனிவா வில் கூடும் கூட்டங்களில் எடுத்துக் காட்டு வதோடு வற்புறுத்தியும் வரு கின்றனர். இதன் காரணமாக 50000 வீடுகளை உடனடியாக அமைக்க முடியவில்லை. இலங்கை அரசு இதற்கான உறுதியான தீர்மானங்களை மேற்கொள் ளாது காலத்தை தள்ளி வருகின்றது. இதுவே தாமதத்திற்கு காரணமாகும்.

குறிப்பாக கொஸ்கம சாலாவ பகுதியில் திடீர் குண்டு வெடித்து பாரிய சேதங்களை ஏற்படுத்தியுள்ளது. வீடுகளை இழந்த மக்களுக்கும் 50 000 ரூபாய் வீட்டு வாடகையாக கொடுக்கவும் நிவாரணங்களை வழங்கவும் வழி வகுத்துள்ளனர். இது ஆபத்து காலத்தில் உதவ வேண்டிய கைங்கரியம் ஆகும். இதனை நாமும் வரவேற்கின்றோம். ஆனால் வடக்கு கிழக்கில் 30 வருடங்களாக யுத்தம் நடந்து பாரிய தாக்கத்துக்குள்ளான மக்களின் எதிர்கால வாழ்வைப் பற்றி எவ்வித அக்கறையும் செலுத்தப்படவில்லை. 2009 ஆம் ஆண்டு யுத்தம் முடிவுக்கு கொண்டு வரப்பட்டது. 6 ஆண்டுகள் ஆகியும் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவியிருந்தால் இந்த அவல நிலை ஏற்பட்டிருக்காது. முன் னாள் அரசு மகிந்த ராஜபக்ஷ அவர் களால் நடாத்தப்பட்ட இராணுவத்தை அப்புறப்படுத்தாது தொடர்ந்து வைத்துக் கொள்ளவே விரும்பினர்.

ஆனால் எதிர்பாராத விதமாக ஜனாதிபதி தேர்தலில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தோல்வியடைந்தார். அதை தொடர்ந்து பொது தேர்த லிலும் நல்லாட் சிக்கான ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மக்களின் நீண்டகால பிரச் சினைக்கு படிப்படியாக தீர்வு கண்டு வருகின்றனர்.

இந்த சிக்கலான நிலையை இட்டு ஐ.நா.சபை சந்தேக கண் கொண்டு பார்க்க வேண்டியுள்ளது. இந்த முரண்பாடான நிலையின் காரணத்தால் யுத்தக் காலத்தில் கொல்லப்பட்டோர் தொகை எவ்வளவு என்று உறுதிப்படுத்துமாறு மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

தற்போதைய அரசு ஸ்ரீ லங்கா சுதந்திர கட்சியுடன் ஐ.தே. கட்சி இணைந்து ஆட்சி செய்து வருகிறது. தமிழ் தேசியக் கூட்டமைப்பும் ஆதரவு வழங்கிகிறது. இந்நிலையில் வடக்கு கிழக்கு மக்களின் வாழ்வாதார விடுதலையை துரிதமாக செய்ய முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. அதன் காரணமாக சிறப்பான வேலைத்திட்டங்களை வேகமாக செய்ய வேண்டிய அவசியம் தற்போதைய அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில் எதிரணியினர் தேவையற்ற சர்ச்சைகளை கிளப்பி வருகின்றனர். யுத்தம் செய்த வீரர்கள் தண்டனைக்குரியவர்கள் அல்ல. அவர்களை நீதிமன்றங்கள் மூலமாக விசாரிக்க முடியாது அவசரகால யுத்த பிரகடனம் நீதிமன்றம் மூலம் விசாரிக்க எவ்வித அதிகாரமும் இல்லை. இதை உணராத முன்னாள் ஜனாதிபதி மின்சார நாற்காலி என்ற கதையை வலுவாக முன்னெடுத்து செல்கின்றார். ஜனாதிபதியை மின்சார கதிரையில் ஏற்றுவதற்கான சட்ட வரன்முறைகளும் கிடையாது என்றும் கூறினார்.




# அழிக்கப்பட்ட ஆவணத்தை மீளப் பெறுவது எப்படி?


(சென்ற வாரத் தொடர்ச்சி)

முக்கியம் : ஒவ்வொரு மீளப்பெறல் செயல்பாட்டிலும் ஒருபகுதி உண்டு. "Overwritten %" என்ற பகுதி. அதாவது நீங்கள் மீளப்பெற முயலும் நேரத்தில் ஏற்கெனவே அந்தகோப்பு கணினியின் உயசனனுளைம பதியப்பட்ட பகுதி வேறு கோப்பால் (File) முழமையாக அல்லது பகுதியளவில் பிரதியீடு செய்யப்பட்டிருந்தால், அதன் வீதத்தை "Overwritten %" நிரல் காண்பிக்கும். 100% பிரதியீடு செய்யப்பட்ட ஒரு கோப்பை மீளப்பெறவே முடியாது என்பதை கவனத்தில் கொள்க. பகுதியளவில் பிரதியீடு செய்யப்பட்ட கோப்பை முழமையாக மீளப்பெறமுடியாது. இதனால், சிலவேளைகளில் மீளப்பெறும் கோப்பு தெளிவில்லாமல் இருக்கலாம்.


இந்த மென்பொருளை முழமையாக பதிய 2.12MB இடமே அவசியமானது. NTFS Format ஐ கொண்ட அல்லது அதனுடன் ஒத்துப்போகின்ற அனைத்துவகை கோப்புக்களையும் மீளப்பெற்றுத் தரவல்லது.

தரவிறக்க இணையத்தள முகவரி:http://www.pandorarecovery.com/

சில பட விளக்கங்கள் கீழே தரப்பட்டுள்ளன.



இது ஆரம்பப் படம். Desktop இல் உள்ள சுருக்க தெரிவை சொடுக்கியவுடன் கிடைப் பது. குறிப்பாக இடது பக்க மூலையில் உள்ள C:\ பிரிவை சொடுக்கியவுடனேயே இந்த Scan செயல்பாடு ஆரம்பமாகும். அதன் பின்னர், C:\ பிரிவில் கடந்த காலங்களில் முழமை யான அழிக்கப்பட்ட கோப்பு விபரங்களை இது காண்பிக்கும்.



இப்போது அந்த விபரங்களை ஒன்றை சொடுகியவுடன் கிடைக்கப்பெறும் தகவல்களை பார்க்கலாம்.

2. TOKIWA Data Recovery (http://tokiwa.qee.jp/EN/DataRecovery_EN.zip)

இந்த மென்பொருளும் முன்னைய மென்பொருள் போன்றே செயல்படக் கூடியது. மேலே தரப்பட்டுள்ள இணையமுகவரியை தொடர்புகொண்டு தரவிறக்க வழி காட்டல்களை பெற்றுக் கொள்ளவும்.

Recycle Bin இலிருந்து நிரந்தரமாக நீக்கப்பட்ட கோப்புக்களை மீளப்பெற்றுக் கொள்வதற்கு உதவுகிறது. பல வாரங்களுக்கு முன்னர் அழிக்கப்பட்ட கோப்புக்களையும் மீளப்பெற்றுத தரும். ஆனால், அந்த விடயங்கள் தொடர் பில் ஆய்வுகளை மேற்கொண்டு வருகிறேன். இப்போதைக்கு, 7-15 நாட்களுக்குள் முற்றாக அழிக்கப்பட்ட கோப்புக்களை இந்த மென் பொருள் பெற்றுத்தரவல்லது. இதனை முழமையாக பதிய தேவையான மென் பொருள் கொள்ளளவு (சுருக்கப்பட்ட) 198KB ஆகும். இதற்கான பிரத்தியேக பதியும் தேவைப்பாடு இல்லை. எங்கும் எடுத்துச் செல்லவல்லது. FAT12, FAT16, FAT32 மற்றும் NTFS Format ஐ கொண்ட அல்லது அதனுடன் ஒத்துப் போகின்ற அனைத்துவகை கோப்புக்களையும் மீளப்பெற்றுத் தரவல்லது.

தரவிறக்க இணையத்தள முகவரி : http://tokiwa.qee.jp/EN/Data Recovery_EN.zip

### தவறின்றி ஆங்கிலம் எழுத கற்றுத் தரும் தளம்

கம்பியூட்டரிலும் நாம் அமைக்கும் ஆவணக் கோப்புகள், மின் அஞ்சல்கள், பேஸ் புக், வேர்ட் செயலி மற்றும் இணைய தளங்களில் நாம் ஆங்கிலத்தில் சொற்களை அமைக்கையில், எழுத்துப் பிழை களை ஏற்படுத்தினால், உடனே சொற்களின் கீழாக சிறிய சிகப்புக் கோடு காடடப்படும். அதில் ரைட் கிளிக் செய்தால், அந்தச் சொல்லின் எழுத்து தவறுகள் திருத்தப்படும். அதில் கிளிக் செய்தால், சரி யான சொல், தவறுகளுடன் அமைக்கப்பட்ட சொல்லின் இடத்தில் அமைக்கப்படும். ஆனால், ஏதேனும் இலக் கணப் பிழை இருந்தால், காட்டாது. இதற்கான தீர்வை அண்மையில் ஓர் இணைய தளத்தில் காண நேர்ந்தது. அந்தத் தளத்தின் முகவரி https://www.grammarly.com/. முன்பு கட்டணம் செலுத்தி மட்டுமே இதனைப் பயன்படுத்த முடியும். அண்மையில் இதில், விரிவான பகுதிகளுடன், நமக்குப் போதுமான வசதிகளுடன், இலவசப் பதிப்பு ஒன்றையும் கொண்டு வந்துள்ளனர்.

# சீனாவின் நாய் இறைச்சி விழா





யூலின் மாவட்டம் சீனாவில் தென்கிழக்கு குவாங்சி மாகாணத்தில் அமைந்துள்ளது. இது ஒரு மலை பிரதேசம், 1238 சதுர கிலோமீற்றர் பரப்பளவில் அமைந்துள்ளது.

இந்த யூலின் மாவட்டத்தில் வருடா வருடம் நாய் இறைச்சி திருவிழா நடைபெற்று வருகிறது. கோடைகால உச்சத்தின் போது, யூன் மாதம் 21 ஆம் திகதி தொடக்கம் 30 ஆம் திகதி வரை, 10 நாட்கள் நாய் இறைச்சி திருவிழா நடைபெறுவது வழக்கம்.

இம் முறை நடைபெற்ற நாய் இறைச்சி சாப்பிடும் விழாவில் 10.000 தொடக்கம் 15,000 நாய்களும், பல ஆயிரம் பூனை களும் கொன்று உணவு சமைத்து விழாவில் பங்கு பற்றியவர்கள் சாப்பிட்டார்கள் என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்த நாய் இறைச்சி சாப்பிடும் விழா விற்கும் யூலின் பிரதேச சபைக்கும் எந்த விதமான தொடர்பும் இல்லை என அதிகார பூர்வமாக அறிவிக்கப்பட்டது. ஆனால் இந்த விழாவை யூலின் உள்ள ஒரு சிறு பான்மை கூட்டம் இந்த நாய் இறைச்சி விழாவை வருடா வரு டம் நடத்தி வருவதாக கூறப் படுகிறது. இந்த விழா வின் உள்ளூர் வியா பாரம் முன்னேற்றப்படு வதாக அவர்கள் கூறி னார்கள்.

கடந்த 400,500 வருடங்களாக சீனா, தென் கொரியா, பிலிப் பைன்ஸ் போன்ற நாடு களில் நாய் இறைச்சி சாப்பிடும் பழக்கம் நிலவி வருகிறது. நாய் இறைச்சி சாப்பிட்டால் நிலவும் வெப்பத்தை குறைக்கலாம் என்று கருதப்படுகிறது.

யூலின் மாவட்டத்தில் நாய் இறைச்சி விழா சில காலங்களாக நடத்தப்பட்டு வருகின்றது. இந்த விழாக் காலத்தில் நாய்கள் இரும்புக் கம்பிகளால் தலையில் அடித்து, மற்றும் கொடூரமான முறையில் தான் கொலை செய்கிறார்கள். ஒரு நாயை கொல்லும் போது பல நாய்கள் பார்த்துக் கொண்டு இருக்கின்றன.

## முடிவுக்கு வந்தது





சீனாவை பொறுத்த வரையில் நாய்களை இறைச்சி தேவைக்காக பன்றி, கோழி வளர்ப்பது போல பண்ணைகளில் வளாப்பது இல்லை. இந்த நாய் இறைச்சி விழாவிற்கு எங்கிருந்து தான் 10,000, தொடக்கம் 15,000 நாய்கள், பூனைகள் வருகின்றது என தெரியவில்லை.

அனேகமாக இங்கே இறைச்சிக்காக வரும் நாய்கள், பூனைகள் வளர்ப்பவர்களி டம் இருந்து களவாடப்பட்டு வருகின்றன என்று தான் கூறப்படுகின்றது.

இம் முறை சீனாவில் உள்ள நல்ல உள்ளங்கள் இவ்வாறு இறைச்சிக்கு கொண்டு வரப்பட்டு அடைத்து வைக்கப்பட்ட நாய்களை காப் பாற்றி உள்ளார்கள்.

யாங்சிகோ கிங் என்ற பெண்மணி, நடைபெற்ற இந்த விழாவில் 7,000 சைனிஸ் யுவான் (698 பிரிட்டிஸ் பவுண்ஸ்) பெறுமதியான பணத்தை கொடுத்து இறைச் சிக்கு அடைக்கப்பட்டிருந்த 100 நாய்களை காப்பாற்றி உள்ளார் என்று செய்திகள் வந்துள்ளன.

இலங்கையை பொறுத்த வரையில் நாய் கள் ஒரு வளர்ப்பு மிருகமாக வளர்க்கப்பட்டு வருகின்றன. இங்கே நாய் இறைச்சி யாரும் சாப்படுவது இல்லை என்பதை அடித்து கூறமுடியும்.

மிருக வதைக்கு எதிராக உள்ள சங்கங்கள் வருங்காலத்தில் சீனாவில் நடைபெறும் இந்த நாய் இறைச்சி விழாவை எதிர்ப்பு தெரிவிக்க முன்வர வேண்டியது மிகவும் அவசியம்.

## பைக்கில் தப்பினான் சுவாதியைக் கொன்ற கொலையாளி..!

சென்னை சூளைமேட்டை சேர்ந்த மென்பொறியாளர் சுவாதி. நுங்கம் பாக்கம் ரயில் நிலையத்தில் கடந்த 24 ஆம் தேதி அதிகாலை 6.30 மணி யளவில் படுகொலை செய்யப்பட்டார். இதுவரை கொலையாளி யார் என்று கூட தெரியாமல் பொலிஸார் திணறி வருகின்றனர். பொலிஸ் விசாரணையில் கொலையாளி குறித்து எந்தவித தக வலும் கிடைக்கவில்லை. சுவாதியின் நண்பர்கள், உறவினர்களிடம் நடத்திய விசாரணையில் அவரை கொலை செய்த மர்ம நபர், நிச்சயம் சுவாதிக்கு நன்றாக தெரிந்தவராகவே இருக்க வேண்டும் என்று போலீஸார் கருதுகின்றனர். அந்த நபர் யார்? என்று தெரியாததே பொலிஸ ாருக்கு தலைவலியாக உள்ளது.


சுவாதியின் குடும்பத்தினர், பொலிஸ ாருக்கு போதிய ஒத்துழைப்பு கொடுக்காதது கொலையாளி குறித்த தகவல்கள் கிடைப் பதில் காலதாமதம் ஏற்படுத்துகிறது. இந் நிலையில் கொலையை நேரில் பார்த் ததாக சூளைமேட்டை சேர்ந்த ஆசிரியர் தமிழ்செல்வன், பொலிஸ் உயரதிகாரிகளிடம் வாக்குமூலம் கொடுத்து இருக்கிறார். அவர் அளித்த தகவலில் கூட கொலையாளி குறித்து எந்தவித துப்பும் துலங்கவில்லை. இதனால் சுவாதி கொலையில் உள்ள மர்ம முடிச்சுக்களை அவிழ்க்க முடியாமல் பொலிஸார் சிரமப்பட்டு வருகின்றனர்.

சுவாதி கொலை செய்யப்பட்ட பகுதிகளில் உள்ள சி.சி.டி.வி கேமரா பதிவுகளை பொலிஸ ார் தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். அதில் தற்போது ஒரு வீடியோவில் கொலை யாளியாக சந்தேகிக்கப்படும் மர்ம நபர் இருசக்கர வாகனத்தில் செல்லும் காட்சி பதிவாகி இருக்கிறது. பொலிஸ ார் வெளியிட்ட கொலையாளி படத்துடன் இரு சக்கர வாகனத்தில் செல்லும் நபரின் உருவம் ஒத்துப் போகிறது. இதனால் இரு சக்கர வாகனத்தில் செல்லும் நபர் கொலை யாளியாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர். அந்த வீடியோ பதிவில் நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்திலிருந்து புறப்படும் அந்த இருசக்கர வாகனம் சூளை நெடுஞ்சாலை வழியாக செல்கிறது. இதன்பிறகு அந்த நபர் எங்கு சென் றார் என்பது தெரிய வில்லை. அதைப் பார்த்த பொலி ஸ ார், அந்த இரு சக்கர வாகன நம்பர், அதில் செல்பவரின் முகம் தெளி வாக உள்ளதா என்பதை ஆராய்ந்து வரு கின்றனர். கொலையாளி என்று பொலீஸ ார் சந்தேகிக்கும் மர்மநபர் குறித்து பல புகைப்படங்கள் வெளியானாலும் கொலையாளியின் முகம் மட்டும் எதிலும் தெளிவாக தெரியாதது விசாரணையின் தொய்வுக்கு முக்கிய காரணமாக இருக் கிறது என்கிறது பொலிஸ் வட்டாரம்.






# ஆன்மீகம்



## நம்நாட்டு திருத்தலப் பாடல்



பாடல் – 'சங்கரி சாம்பவி'
தலம் – கல்லடி முகத்துவாரம் முத்துமாரி அம்மன்
பாடல்வரிகள் – வெற்றி துஷ்யந்தன்
பாடியவர் – ஹரிணி
இசை – சாய் தர்ஷன்

**பல்லவி**

சங்கரி சாம்பவி சௌபாக்கிய ரூபிணி
சஞ்சலம் போக்குகின்ற திரிபுர சுந்தரி
சர்வலோகத்தின் சிம்ம வாகினி
முத்துமாரியே சரணமம்மா

**அனுபல்லவி**

மட்டு நகர் ஆளுகின்ற மங்கள ரூபிணி
மாதவம் நிறைந்தருளும் மகிஷாவர்த்தனி
இகபர வரமருளும் ஈஸ்வரனின் நாயகி
இன்னல்கள் தீர்த்தருளும் கல்லடியின் நாரணி

**சரணம் 01**

மங்களச் செல்வியே உன் மலரடி பணிந்தோம்
மட்டு வாவி கரையோரம் உனை தினம்
தொழுதோம்
மாங்கல்ய அருள் செய்து பிள்ளை வரமருளி
நிற்கும்
மாதவியே மகிமை சேர் காமாட்சியே சரணம்
நாரணி நர்த்தனி நல்லருள் செய் நங்கையே
நித்ய கல்யாணி
நானிலம் காத்திடும் ஞான விகாஷினி
தேவியே காமாட்சி

**சரணம் 02**

கௌரி மனோகரியே எமையாளும் மகமாயியே
கருணை செய்தருள்வாய் சௌந்தரியே தாயே
வெள்ளி மந்த்ர பிரம்பாலே எமைக்
காக்கும் வாணியே
அள்ளி வரம் தந்திடம்மா கல்லடியின்
வேணியே
பாவ விமோஷனி பர்வத வர்த்தனி பார்
காக்கும் ஸ்வரலய ரூபிணி
நாத நர்த்தனி நாதனின் நாயகி
நாரணியே தாயே

## நாம் ஏன் கோவிலுக்குப் போக வேண்டும்?

கோவில்கள் எங்கு பூமியின் காந்த அலை அடர்த்தியாக ஓடுகிறதோ அங்கு கட்டப்படுகின்றன. அது கிராமமாகவோ, நகரமாகவோ, மலை மீதோ எங்கு வேண்டுமானாலும் இருக்கலாம். பூமியின் வட தென் துருவ காந்த அலை எங்கு அதிகமாக உள்ளதோ அங்கு கட்டப்படுகின்றன. முக்கியமான கடவுள் இருக்குமிடமான கர்ப்ப கிரகம் (அ) மூலஸ்தானத்தில் இந்த அலை அதிகமாக இருக்கும். சரியாகச் சொல்வதெனில் இந்த மூலஸ்தானத்தில் சிலை இடம் பெற்ற பிறகே கோவிலின் அமைப்பு கட்டப்படும். இந்த இடத்தில் தாமிரத் தகடுகள் வேத வரிகளைச் செதுக்கி புதைக்கப்படும்.

இவ்வாறு ஏன் செய்கிறார்கள் என்றால் காந்த அலைகளை அது சுற்றிலும் பரப்பவே. எனவே ஒருவர் தொடர்ந்து கோவிலுக்கு சென்று சிலையை வலப்புறமாக சுற்றி வந்தால் அவர் பூமியின் காந்த ஆற்றலைப் பெறுவார். அவரின் உடல் அந்த ஆற்றலை கிரகித்துக் கொள்ளும். இவ்வாற்றல் அவர் நலமுடன் வாழ வழிவகுக்கும். இது அறிவியல் பூர்வமான உண்மை.

மேலும் கர்ப்பக்கிரகம் மூன்று திசையிலும் மூடப்பட்டுள்ளதால் ஆற்றலை அதிகப் படுத்தும். மூலஸ்தானத்திலிருக்கும் விளக்கும் வெப்ப ஆற்றலை வெளிப்படுத்தும். மணியோசை பக்தர்களின் மனதினை அலைபாய விடாமல் ஒன்றியிருக்கச் செய்யும். இது மன அழுத்தினைக் குறைக்கும்.

## குங்குமம் இடும் முறை



குங்குமத்தை மோதிர விரலால் தான் இடவேண்டும். சிவப்பு குங்குமமே புனிதமானது. பெண்கள் தம் இடதுநாசிங்யில் சுவாசம் இருக்கும்போது குங்குமம் இடுதல் மாங்கல்ய விருத்தியை தரும். ஸ்ரீலட்சுமி தேவி உறையும் மூன்று இடங்களான மாங்கல்யம், நெற்றி, தலை வகிடின் ஆரம்பம் ஆகிய மூன்று இடங்களிலும் குங்குமத்தை இடுதலே உத்தமம். கோவிலில் குங்குமத்தை வலக் கையில் வாங்கி இடக்கையில் மாற்றலாகாது. வலது உள்ளங்கையில் குங்குமத்தைப் பெற்று அந்நிலையிலேயே வலது மோதிர விரலை வளைத்து குங்குமத்தை தொட்டு நெற்றிக்கு இடுதல் வேண்டும்.



# சந்தர்ப்பவாதிகள்

யாழ்ப்பாணப் பயணத்திற்கு ரிக்கற் பதிவு செய்தாயிற்று. இன்டெநட் இருப்பது எது எதுக்கோவெல்லாம் வசதியாகப் போய் விட்டது. முன்பெல்லாம் பயண முகவர்களுக்கு போன் செய்து டிக்கட் பதிவு செய்ய வேண்டும். இப்பொழுதோ ஒரு கடன் அட்டையும் இணைய அறிவும் இருந்துவிட்டால், நாமே மலிவு விலையில் பயணச் சீட்டுகளை தேடியெடுத்து விட முடிகின்றது. இணையம் பிள்ளைகளைக் கெடுக்கின்றது என்கிறார்கள். எதையும் பிழையான வழியில் உபயோகித்தால் அது கெடுக்கத்தானே செய்யும்.

சத்யன் இப்படித்தான் தன் பயணச் சீட்டைப் பதிவு செய்திருந்தான். இது ஒரு வழிப் பயணம் என்பதால் பயணச் சீட்டு விலையில் பெரிதாக ஒரு தொகையைச் சேமிக்க முடியவில்லை. இருவழிப் பயணம் என்றால் நிச்சயம் மலிவு விலையாகவே இருக்கும். சத்தியன் இனி இந்த நாட்டுக்குத் திரும்பிப் பயணிக்க வேண்டிய அவசியம் இல்லையே.

கடந்த மூன்று வருடத்தில் மாலை நேரங்களில் வேலை செய்யக் கிடைத்த சந்தாப்பங்களில் நேரம் பார்க்காது வேலை செய்து, அவனால் ஒரு கணிசமான தொகையைச் சேமித்து வைக்க முடிந்திருந்தது. தன்பெற்றோரை இதுவரை அவன் பண உதவிக்காக நெருங்கியதுமில்லை. ஆரம்ப காலங்களில் அங்கு கிடைத்த நண்பர்களிடம் மேலதிகச் செலவுக்கு பணம் கைமாறியவன், பின்பு ஒரு வேலை தேடிக்கொண்டதும், இந்தச் சிறு கடன்களை அடைக்க முடிந்ததுடன், மாதாமாதம் சிறுசிறு தொகைகளைச் சேமிக்கவும் முடிந்தது.

குறிப்பாக பல்கலைக்கழக விடுமுறை தினங்களிலும், கிறிஸ்மஸ் காலத்திலும் கூடுதல் மணித்தியாலங்கள் வேலைசெய்து அதிகம் சம்பாதிக்க முடிந்தது.

அப்பாவுக்கும் அம்மாவுக்கும் உடுப்புகள் வாங்கிக் கொண்டிருந்தபோது, அவனுள் ஒரு வினோதமான ஆசை எழுந்தது.

நிவேதாவுக்கும் ஏதாவது வாங்க வேண்டுமோ என்பதுதான் அந்த ஆசை. நிவேதாவின் முதல் தொலைபேசித் தொடர் பின் பின் தன்னை அறியாமல் தனக்குள் ஏற்பட்ட மாற்றங்களை அவன் அப்பொழுது நினைத்துக் கொண்டான்.

கல்யாணம் என்பதில் பெரிதாக ஆர்வம் காட்டாதவன், அப்பா பேசிய பெண்ணை பேசாமல் கட்டிக் கொள்ளத் தயாராக இருந் தவன் இப்பொழுது மாறித்தான் போய் விட்டான். இன்னும் நேரில் சந்திக்காத அந்தத் தொலைபேசிச் சிநேகிதியை அவ னுக்கு நன்றாகப் பிடித்திருந்தது. அவள் தொலைபேசி அழைப்புகள் வராதா என்று அவன் எதிர்பார்ப்புகளோடு காத்திருக்கத் தொடங்கியபோது, அந்தப் பெண் தன்னை மயக்கி விட்டாள் என்பதை அவன் உணர்ந்து கொண்டான்.

இதுதான் காதலா?

அவனுக்குவாய்விட்டுச்சிரிக்கவேண்டும் போலிருந்தது. சத்யன் காதல் வலையில் வீழ்ந்திருக்கிறான். சத்யனின் நண்பர்கள் இதை நிச்சயம் நம்ப மறுப்பார்கள். கையில் கற்பூரம் எரித்து சத்தியம் பண்ணினாலும் சத்தியன் கதை அளக்கிறான் என்றுதான் சொல்வார்கள். உனக்கு காதலிக்க எங்கே துணிவிருக்கின்றது என்று எள்ளி நகை யாடுவார்கள்.

இப்பொழுது அந்தக் காதலிக்குத்தான் எதையாவது வாங்கிச் செல்லலாமா என்று அவன் நினைக்கிறான்....

அவன் கைத்தொலைபேசி கிணு கிணுத்தது.



தன் ஐபோனைக் கையிலெடுத்தான்.

நிவேதான் அழைக்கிறாள். மனதுள் இனம்புரியாத சந்தோஷ உணர்வு தலை தூக்கியது.

"சத்யன் ஹியர்.... " என்றான் மனதுள் உற்சாகம் கொப்பளிக்க!

இருவரும் பரஸ்பரம் சுகம் விசாரித்துக் கொண்டார்கள். இருவருமே யாழ் பய ணத்திற்கான டிக்கற்றைப் பதிவு செய்து விட்டதால், பயணத் திகதிகளைப் பரிமாறிக் கொண்டார்கள்.

தங்கள் முதல் சந்திப்பு சத்யன் வீட்டில் தான் நடக்கவேண்டும் என்பதில் இருவரும் இணக்கம் கண்டிருந்தார்கள். தான் போன் செய்துவிட்டு தன் தந்தையுடன் வீட்டுக்கு வருவதாகக் கூறிய நிவேதா.

"சுகமான பயணத்திற்கு என் வாழ்த் துக்கள்" என்று சொல்லித் தொடர்பைத் துண்டித்தாள்.

இன்னும் நிவேதா பேசமாட்டாளா என்ற ஏக்கம் மனதை நிறைக்க, தன் ஐபோனை பாக்கட்டில் வைத்து விட்டு, சேலைக் கடை ஒன்றை நோக்கி நடந்தான் சத்யன். ஓர் அழகான சாரியை நிவேதாவிற்குப் பரிசளிக்க வேண்டுமென்று அவன் அந்தக் கணம் முடிவெடுத்திருந்தான். ........

வழக்கம்போல ஈஸிஜெட் விமான மொன்றில்தான் சரன் சுவிஸ் நாட்டிற்குப் பயணித்திருந்தார். முன்பெல்லாம் விமா னப் பயணங்களுக்குப் பெருந் தொகை செலவாகும். பிரபல்யமான பெரிய விமான நிறுவனங்கள் இதனால் கொள்ளை கொள் ளையாகச் சம்பாதித்துக் கொண்டிருந்தன. ஆனால் கடந்த ஐந்து வருடங்களில் நிலைமை அடியோடு மாறிவிட்டது. பல சிறு விமானங்கள் முளைவிட்டதோடு, விமானச் சீட்டுக்களின் விலையிலும் வீழ்ச்சி. இதில் குறிப்பிடத் தக்கது இங்கிலாந்திலிருந்து இயங்கும் ஈஸிஜெட் என்ற விமான நிறு வனம். இன்று பாரிய வளர்ச்சியைக் கண்டுள்ள இந்த விமான நிறுவனம், மிக மலிவான விலையில் பயணங்களை மேற்கொள்ள உதவி வருகின்றது....

தன் நண்பர் உருத்திரனின் மரணச் சடங்களில் கலந்துகொள்ள அவருக்கு அதிக கால அவகாசம் கிடைக்கவில்லை என்றாலும், அவரால் அதிக பணம் செலவிடாமல் டிக்கட்டைப் பதிவு செய்ய முடிந்திருந்தது....

சுங்கப் பகுதியைக் கடந்தபோது, இரு பிரிவுகளை இவர் எதிர்கொள்ள வேண்டி வந்தது. சுவிஸ் சுங்க அதிகாரிகளிடம் வரி செலுத்துவதற்கு ஒரு பிரிவு. அப்படி எதுவும் இல்லை என்றால் பயணப் பொதியைத் தள்ளிக் கொண்டு வெளியேற இன்னொரு கடவைப் பகுதி.

தன்னிடம் ஒன்றும் இல்லைத்தானே என்று அதற்குரிய பகுதி வழியாக அவர் நடக்க முற்பட்ட போது ஒரு சுவிஸ் அதிகாரி அவரைத் தடுத்து நிறுத்தினார். பயணப் பொதியை மேசையில் வைத்து திறக்கும்படி பணித்தார் அதிகாரி. மடியில்தான் கன மில்லையே. பிறகென்ன பயம்....

சரன் தன் பயணப் பொதியைத் திறந்தார். உள்ளே பல்லிளித்த இரண்டு விஸ்கிப் போத்தல்களையும் வெளியே எடுத்த அதிகாரி, என்ன இது என்ற தோரணையில் சரனைப் பார்த்தார்.

"இரண்டுமே டியூட்டி பிரீ ஷாப்பில் வாங்கியவை" என்றார் சரன் ஜேர்மன் மொழியில்!

"எனக்கு அது தெரியும். ஒன்றைத்தான் வரியில்லாமல் கொண்டுபோக முடியும். இரண்டாவது வரிப்பணத்திற்கு உட்பட்டது" என்றார் அதிகாரி.

"மன்னிக்கவும் அது எனக்குத் தெரி யாது."

"தெரிந்திருக்க வேண்டும்..."

பக்கத்திலிருந்து அறிவுறுத்தல் விளம்ப ரத்தை அதிகாரி சுட்டிக்காட்டினார்.

சங்கடத்தில் நெளிந்தார் சரன். பொது வாகக் களவு பொய் வேலைகளை செய்ய விரும்பாதவர் சரன். அனுமதிக்கப்பட்ட அளவை விட இரட்டிப்பான அளவு பொருளை வைத்துக் கொண்டு, அதற்கான வரியைச் செலுத்தாமல், வெளியே போக முயன்றது பெரிய குற்றந்தான்.

"மன்னிக்க வேண்டும். உண்மையில் எனக்கு இந்த விடயம் தெரியாது. "

ஒரு கணம் நிதானித்த அதிகாரி.

## அத்தியாயம் ௭

"இது முதற் தடவை என்பதால் சாதாரண குற்றப் பணத்தோடு விட்டுவிடுகின்றேன். ஜாக்கிரதை" என்று எச்சரித்தார் அதிகாரி. குற்றப் பணத்தைச் செலுத்திவிட்டு, பயணப் பொதியை இழுத்துக் கொண்டு, சரன் சுங்கப் பகுதியை விட்டு வெளியேறியபோது, ஏதோ கொலைக்குற்றம் செய்து விட்ட மனநிலையிலிருந்தார் அவர்......

"வெல்கம் டு சுவிஸ் " என்று நண்பன் கார்த்தி குரல் கொடுத்தபோதுதான், அவர் குற்ற உணர்விலிருந்து சற்றே மீண்டார். முகத்தில் வலியச் சிரிப்பை வரவழைத்துக் கொண்டு, நண்பனின் கைகளைப் பற்றி ஆரத் தழுவிக் கொண்டார். தன் நண்பனின் கார் ஒன்றில்தான் கார்த்தி வந்திருந்தார். இருவரும் காரில் ஏறிக்கொண்டதும், கார் புறப்பட்டது. சுவிஸ் தெருக்கள் பக்கம் அவர் கண்கள் ஓடின.

எந்தச் சீமைக்குப் போனாலும் சுவிஸ் நாட்டின் பக்கம் எந்த நாடும் தலைவைத்துப் படுக்க முடியாது என்ற நினைப்பு அந்தக் கணம் அவருள் எழுந்தது. அந்த நாட்டுக் கென்றே ஒரு தனிக் கம்பீரம், அழகு இருக்கின்றது என்று அவர் நினைப்பு ஓடியது. தான் உலகின் பல நாடுகளுக்கும் பயணித்திருந்தாலும், சுவிஸ் நாட்டின் இயற்கை அழகும், பணச் செழுமையும் வேறு எந்த நாட்டிலும் இல்லையே என்று அந்தக் கணம் அவர் நினைத்துக் கொண்டார்.......


(13 ஆம் பக்கத் தொடர்ச்சி...)

## ஐக்கிய நாடுகள் ...

மேலும் நீதி விசாரணை முறையில் குறிப்பிடப்பட்டுள்ள வெளிநாட்டு நீதிபதி கள், சட்டத்தரணிகள், விசாரணையா ளர்கள் ஆகியவர்கள் அடங்கிய ஓர் பொறி முறையை, தீர்மானத்தில் குறிப் பிடப்பட்டுள்ளது போல் அமைக்கப்பட வேண்டும். அது சம்பந்தமாக இல ங்கை அரசு தாமதித்தும் ஏமாற்றி யும் வந்தால், ஐக்கிய நாடுகள் சபை மேலதிக நடவடிக்கை எடுக்க முன்வர வேண்டும்.

2. ஐக்கிய நாடுகளின் மனித உரிமை களின் அமைப்பு குற்றங்கள் நிகழ்த்தப் படும் இடமான வடக்கு, கிழக்கு பிர தேசத்தில் அதன் காரியால யங்களை அமைக்க முன் வரவேண்டும். முன் வந்து பாதிக்கப்பட்டவர்களுக்கு தேவை யான வசதிகளையும், சாட்சியங்க ளுக்கு பாதுகாப்பும் வழங்க முன் வர வேண்டும்.
3. வடக்கு கிழக்கு மாகாணத்தில் இரா ணுவத்தின் கட்டுப்பாட்டை நீக்குமாறு, இலங்கை அரசாங்கத்தை ஐக்கிய நாடுகள் சபை வற்புறுத்த வேண்டும்.

## மருத்துவமனை வரவேற்பாளரான ரோபோ



பெல்ஜியத்தின் லீஜ நகரிலும், ஓஸ்டெண்ட் நகரிலும் உள்ள மருத்துவமனை களில் நோயாளிகளை வரவேற்கவும், நோயா ளிகளை பார்க்க வருவோருக்கு வழி காட்டவும் உதவும் இரண்டு ரோபோக் களை, 'ரிசப்னிஸ்ட்' வேலைக்கு அமர்த்தி யிருக்கின்றனர். 'பெப்பர்' என்று பெயரிடப் பட்டுள்ள இந்த ரோபோக்களை, ஜப்பா னைச் சேர்ந்த, 'சாப்ட்பேங்க்' நிறுவனம் தயாரித்திருக்கிறது. இதே ரோபோக்களை, ஏற்கனவே பிரான்சில் ஒரு வர்த்தக வளா கத்தில் வெள்ளோட்டம் பார்த்திருக்கிறது சாப்ட் பேங்க். பார்ப்போரை கவரவும், கனிவு காட்டவும் ஆச்சரியமூட்டும் வகையில், பெப் பர் ரோபோக்கள் படைக்கப்பட்டிருப்பதாக சாப்ட் பேங்க் சொல்கிறது. மனித உரு வத்தை ஒத்த, 'ஹியூமனாய்ட்' ரக ரோ போக்களான இவை, பார்வைக்கு கேம ராவையும், செவிக்கு மைக்கையும், நகர் ந்து செல்வதற்கு சக்கரங்கள் மற்றும் பல வித உணர்வான்களையும் பயன்படுத்து கின்றன.

# விளையாட்டு

# வடக்கின் வல்லவன்


தினச்செய்தியின் அனுசரணையில் நெற்கொழு விளையாட்டுக் கழகம் நடத்தும் வடக்கின் வல்லவன் உதைபந்தாட்டத் தொடரின் மூன்றாம் சுற்று போட்டியில் கம்பர்மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய மணற்காடு சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் 4:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

ஆட்டத்தின் ஆரம்பத்திலிருந்து தனது ஆதிக்கத்தினை வெளிப்படுத்திய மணற்காடு சென்.அன்ரனீஸ் மூன்றாவது நிமிடத்திலேயே அலெக்ஸ் மூலமாக கோல் அடித்து அதிர்ச்சியளித்தது. தொடர்ந்த ஆட்டத்தில் 12 ஆவது மற்றும் 30 ஆவது நிமிடங்களில் சுஜீபன் இரண்டு கோல்களை அடித்து முன்னிலைப்படுத்தினார்.

வீரர்களை முன்நகர்த்தி ஆடிய யங்கம்பன்ஸ் வீரர் ரமணன் 44 ஆவது நிமிடத்தில் கோல் அடித்தார். 48 ஆவது நிமிடத்தில் சென்.அன்ரனீஸ் வீரர் சுஜீபன் மேலும் ஒரு கோலினை அடித்தார். தொடர்ந்த ஆட்டத்தில் யங்கம்பன்ஸ் வீரர்களுக்கு சில அரிய வாய்ப்புக்கள் கிடைத்த போதும் கோலாக மாற்ற தவறினர். ஆட்ட நேர முடிவில் 4:1 என்ற கோல் கணக்கில் மணற்காடு சென்.அன்ரனீஸ் வெற்றி பெற்றது.

போட்டியின் ஆட்ட நாயகனாக மூன்று கோல்களை அடித்த சென்.அன்ரனீஸ் இளம் வீரர் சுஜீபன் தெரிவுசெய்யப்பட்டு அவருக்கான





பணப் பரிசையும் பதக்கத்தினையும் இலங்கை தமிழரசு கட்சியின் நிர்வாக செயலாளர் எஸ்.எக்ஸ். குலநாயகம் வழங்கிக் கௌரவித்தார்.

மின் ஒளியில்கடந்த வியாழக்கிழமை போட்டியில் முல்லைத்தீவு சென்.லூட்ஸ் கழகத்தை எதிர்த்து விளையாடிய மன்னார் சென். லூசியஸ் கழகம் 21 கோல் கணக்கில் வெற்றி பெற்றது.

முதற்பாதி ஆட்டத்தின் 15 ஆவது நிமிடத்திலேயே சென்.லூட்ஸ் வீரர் ஸ்ரீ முதலாவது கோலை அடித்தார்.

தொடர்ந்து பல முயற்சிகளை சென்.லூசியஸ் மேற்கொண்ட போதும் முயற்சி வெற்றியளிக்காது முதற்பாதி ஆட்டத்தில் சென். லூட்ஸ் 1:0 என முன்னிலை பெற்றது.

இரண்டாவது பாதி ஆட்டத்தின் 83 ஆவது நிமிடத்தில் சென்.லூசியஸ் எடிசன் கோல் அடிக்க சமநிலையானது. போட்டியின் இறுதிக்கட்ட நேரத்தில் 90 ஆவது நிமிடத்தில் சென்.லூசியஸ் வீரர் பிராங்கிளின் கோல் அடித்தார்.

போட்டியின் ஆட்ட நாயகனாக சென்.லூசியஸ் வீரர் ரொபேட் தெரிவு செய்யப்பட்டு பணப் பரிசினையும் பதக்கத்தையும் சிவன் அறக்கட்டளை ஸ்தாபகர் வே. கணேஸ்வரன் வழங்கி கௌரவித்தார்.

# ரவிசாஸ்திரியை சிதறடித்த கம்பீர்



ரவிசாஸ்திரியை காட்டமாக விமர்சனம் செய்துள்ளார் கம்பீர். இது குறித்து கம்பீர் கூறுகையில், "பயிற்சியாளர் பதவி கிடைக்காத ஏமாற்றத்தில் ரவிசாஸ்திரி தனது கருத்துக்களை வெளியிட்டார். இந்த கருத்துக்கள் அவரது விரக்தியை தான் காட்டுகிறது. கும்ப்ளே மிக சிறந்த தேர்வு. அவர் மிகவும் கடினமான உழைப்பாளி.

தனக்குக் கீழ் இந்திய அணி வெற்றிகரமாக செயல்பட்டதாக ரவி சாஸ்திரி கூறிவருகிறார்.

இந்திய அணியின் இயக்குனராக இருந்த போது ரவிசாஸ்திரி ஒன்றும் செய்யவில்லை, எல்லாம் தோல்விதான் என்று மிகவும் காட்டமாக கம்பீர் விமர்சனம் செய்துள்ளார்.

இந்திய அணியின் இயக்குனராக 18 மாதங்கள் பணியாற்றிய ரவிசாஸ்திரி பயிற்சியாளர் பதவி கிடைக்கும் என்று ஆவலுடன் எதிர்பார்த்தார். ஆனால் கும்ப்ளே நியமிக்கப்பட்டதால் அவர் மிகுந்த ஏமாற்றம் அடைந்தார். இதை அவர் நேரிடையாகவே தெரிவித்தார். பயிற்சியாளர் தேர்வு விவகாரம் தொடர்பாக ரவிசாஸ்திரி - கங்குலி இடையே மோதல் ஏற்பட்டுள்ளது.


இந்நிலையில் ஆனால் அவர் சொல்லாமல்விட்டது, அவர் இயக்குனராக இருந்த போதுதான் இந்திய பங்களாதேஷிடமும் சொந்த மண்ணில் தென் ஆபிரிக்காவிடமும் தோற்றது. இரண்டு உலக கிண்ணப்போட்டிகளிலும் தோற்றது. இதில் ரி20 உலக கிண்ணப் போட்டி இந்தியாவில் நடைபெற்றது. 18 மாதங்களில் இந்தியா வென்றது என்ன? ஒன்றும் இல்லை. ஒரு வெளிநாட்டு தொடரை கூட கைப்பற்றவில்லை. நீங்கள் வாய் கிழியப் பேசலாம் ஆனால் அதை யாறும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்" என்று காட்டமாக விமர்சனம் செய்துள்ளார்.

# "டோன்ட் கோ மேஸி"

## ஆர்ஜென்ரீனாவில் வீதி வீதியாக பிரசாரம்

கோபா அமெரிக்கா இறுதிப்போட்டியில் சிலி அணிக்கு எதிராக அடைந்த தோல்வியால் ஆர்ஜென்ரீன வீரர் லயோனல்மேஸி திடீரென ஓய்வு அறிவித்தார். இதனால் உதை பந்தாட்ட உலகம் அதிர்ச்சியில் உறைந்தது. தனது முடிவை அவர் மறுபரிசீலனை செய்ய வேண்டும் என ஆர்ஜென்ரீன உதைபந்தாட்ட ஜாம்பவான்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர். இதனிடையே ஆர்ஜென்ரீனா தலைநகர் புவனெஸ் ஜரிஸ் நகர நிர்வாகம் 'டோன்ட் கோ' என்ற பிரசாரத்தை கையில் எடுத்துள்ளது. அந்நகர மேயர் லாரிட்டா மேஸி தனது முடிவை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என சமூக வலை தளங்களில் வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளார்.

தொடர்ந்து வீதி வீதியாக சென்று ரசிகர்கள் பிரசாரம் செய்தனர். வாகன ஓட்டிகளுக்கு எச்சரிக்கை வாசகங்களை தெரிவிப்பதற்காக சாலைகளில் நிறுவப்பட்டுள்ள எல்இடி திரைகளிலும் 'டோன்மேஸி தனது முடிவை மறுபரிசீலனை செய்வார் என்ற நம்பிக்கையில் ரசிகர்களும் நகர நிர்வாகமும் இந்த முயற்சியில் ஈடுபட்டுள்ளது. மேஸியை சமாதானப் படுத்தும் முயற்சியாக ஜனாதிபதி மரிசியோ மாக்ரி அடுத்த வாரத்தில் அவரை நேரில் சந்திக்க உள்ளார். இதனிடையே இந்தியாவின் பிரபல மணல் சிற்ப கலைஞர் சுதர்சன் பட்நாயக் ஒரிசாவின் புரி நகர கடற்கரையில் டோன்ட் கோ மேஸி என்ற வாசகத்துடனும் படத்துடனும் கூடிய மணற் சிற்பத்தை வடிவமைத்துள்ளார்.



தினச்செய்தி
என்றும் உங்களுடன்



# மட்டக்களப்பில் எல்லாள மன்னன்

எல்லாளன் தமிழ் மன்னன் இயேசு கிறிஸ் துவுக்கு 235 ஆம் ஆண்டுகளுக்கு முன்னதாகப் பிறந்தவன். கி.மு 205 ஆம் காலப்பகுதியில் சோழ நாட்டில் இருந்து வந்து அன்று அனுராத புரத்தை தலைநகராக கொண்டு ஆட்சிபுரிந்த அசேலா மன்னனை தோற்கடித்து அனுராத புரத்தை கைப்பற்றினான்.



44 ஆண்டுகள் நீதி தவறாது ஆட்சி நடத்தினான். மகாவம்சத்தின் கூற்றுப்படி, 'அவன் தன் படுக்கை அறையில் ஒரு மணியை தொங்க விட்டிருந்தான். அது, அரண்மனைக்கு வெளியே தொங்கவிடப்பட்டிருந்த ஒரு கயிற்றுடன் இணைக் கப்பட்டு இருந்தது. தங்களுடைய குறைகளை மன்னருக்குத் தெரிவிக்க, யார் வேண்டுமானா லும், எப்போது வேண்டுமானாலும் மணியை அடிக்கலாம்'.

ஆய்வின், படி சோழ வம்சத்தை சேர்ந்த மன்னன் எல்லாளன் தான் மனு நீதி சோழன் என கருதப்படுகிறது.

மனு நீதி சோழன் கதையில் ஒரு மாடு வந்து எல்லாளன் நிர்மாணித்து வைத்திருந்த மணியை முட்டி ஓசை எழுப்பினது என்றும், எல்லாளன் மகன் அந்த மாட்டின் கன்று குட்டியை தேர் ஏற்றி கொன்று விட்டான் என்று முறைப்பாடு செய்தது.



அந்த முறைப்பாட்டை அடுத்து தேரேற்றிக் கொன்ற தன் மகனையும் எல்லாளன் தேரேற்றிக் கொல்லுமாறு கட்டளை யிட்டான்.

எல்லாளனுக்கு 74 வயது ஆகின்ற பொழுது தென் இலங்கையை கவந்திசா என்ற சிங்கள மன்னன் ஆண்டு வந்தான். அவனுக்கு காமினி என்ற ஒரு மகன் இருந்தான். துட்டத்தனம் நிறைந் தவனால், துட்ட காமினி என்று அழைக்கப்பட்டான் என்று வரலாற்றில் கூறப்படுகின்றது.

துட்டகாமினி தனது ராஜ்ஜியத்தை விரிவு படுத்த விரும்பினான். எல்லாளன் அனுராதபுரத்தை ஆட்சி செய்த ராஜ்ஜியத்தை கைப்பற்ற துட்ட காமினி படை திரட்டினான். அவன் வந்த பாதை யில் குறுக்கிட்ட சிறு சிறு ராச்சியங்களை தோற் கடித்து வென்று வந்தான்.

அப்பொழுது ஓர் தமிழ் மன்னனை தோற்கடிக்க முடியாது இருந்த போது தனது தாயாரான விகாரம-காதேவியை அந்த மன்னனுக்கு மணமுடித்து வைத்து, அவருடைய நட்பை பெற்று கொண்டு அனுராதபுரத்தை நோக்கி பெரும் படையோடு சென்றான்.

இதை அறிந்த எல்லாளன், அவனை கோட் டைக்கு வெளியே எதிர்கொண்டு போரிட முன் வந்தான். அனுராதபுரம் கோட்டைக்கு வெளியே இருதரப்பு படைகளும் மோதின. போர் பயங்கர மாக நடந்தது. இரத்த ஆறு ஓடியது.

இந்நிலையில், எல்லாளனுக்கு துட்டகாமினி சவால் விட்டான். "நாம் இருவரும் நேருக்கு நேர் நின்று போர் புரிவோம். யாருக்கு வெற்றி என்பதை நமது நேரடிப் போர் தீர்மானிக்கட்டும்" என்றான். அந்த போர் நடந்தபோது எல்லாளனுக்கு வயது 74. துட்ட காமினி இளைஞன் என்றாலும் அவன் விட்ட சவாலை, எல்லாளன் ஏற்றுக்கொண்டான்.

எல்லாளன் தனது மகாபம்பட்ட (பெரிய மலை போன்றது) என்ற யானையிலும், துட்டகாமினி கந்துள என்ற யானையிலும் ஏறி போரிட்டனர்.

எல்லாளன் வயோதிபராக இருந்தாலும் தீரத் துடன் போரிட்டார். எனினும், துட்டகாமினியின் யானை, எல்லாளன் அமர்ந்திருந்த யானையின் முகத்தில் குத்தி கிழித்தது. எல்லாளனின் யானை கீழே சாய்ந்தது. அதே நேரத்தில் துட்ட காமினி எறிந்த ஈட்டி, எல்லாளன் உயிரைக் குடித்தது.

எல்லாளன் இறந்த இடத்திலேயே அவர் உடலை தக்க மரியாதையுடன் துட்ட காமினி தகனம் செய்தான். அதே இடத்தில் கோவில் ஒன்றை கட்டவும் ஏற்பாடு செய்தான்."இந்த வழியே செல்பவர்கள் யாராக இருந்தாலும், அவர்கள் அரசர்களே ஆனாலும், கோவிலை கும்பிட்டு விட்டு செல்லவேண்டும்" என்று




உத்தரவிட்டான். எல்லாளனின் வீரத்துக்கு, துட்ட காமினி அளித்த மரியாதை இது, என மகா வம்சத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த கோயில் எல்லாளனின் னோவில் அல்ல என்று பரனவிதான போன்ற புதைபொருள் ஆராய்ச்சியாளர்கள் திரித்துக் கூறி வருகின்றார்கள். சிங்கள மயமாக்கல் முயற்சியில் ஈடுபடும் இவர்கள் இன்று இந்த ஆலயத்தை வேறு பெயரில் அழைக் கிறார்கள். இது ஓர் தமிழ் மன்னனுக்கு சிங்கள இனவாதிகள் செய்த கடும் விரோதமான செயல் ஆகும்.

நாம் எல்லாளனை மறந்திருக்கிற காலத்தில் மட்டக்களப்பில் ஆரையம்பதி பிரதான வீதியில் எல்லாளனுக்கு சிலை அமைத்து இருப்பதை காணப்பட்ட போது பெரிதும் ஆச்சரியமும் மகிழ்ச்சி யும் அடைந்தேன்.



இப் பத்திரிகை சுன்னாகத்திலுள்ள தினச்செய்தி நிறுவனத்தினால் கோப்பாயிலுள்ள நாவலர் அச்சகத்தில் அச்சிடப்பட்டு ஜூலை 02, 2016 அன்று வெளியிடப்பட்டது.